ஆஸ்திரேலியா

# எதிரொலி

ETHIROLI

குரல் 09 அதிர்வு 104 மாசி 2026 editor@ethiroli.com தொ.பே:1800 960 162



Budget Friendly
Home Improvements Pty Ltd
Quality
Renovation Work
0400 287 198


## தமிழர் திருநாள் - மெல்பேர்ண்












ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்


ROYAL
INTERNATIONAL
MONEY TRANSFERS
EASY • FAST • SAFETY
நாணயமிக்க பணப்பரிமாற்றம்
'டன்டிநொங்' இல்
புதியதோர் சேவை
BOC
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
සම්පත් බැංකුව
சம்பத் வங்கி
Sampath Bank
UNION BANK
Amãna Bank
It's Your Bank
Same day bank transfer
No One Beat Our Rate
THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175
(03) 87649143
0406409403
royalinfomoney@gmail.com

GRACE GROCERY
FRESH FINDS GREAT DEALS
INDIAN AND SRILANKAN

# GRACE GROCERY

INDIAN AND SRILANKAN GROCERY


**Our Current Location**

Casey Central (Narre Warren) and Clyde North next to ALDI/Bunnings

**Our New Locations Opening Soon**

- Mambourin Shopping Centre (Mambourin) - 2025 / • Farm Gate Local (Clyde) - 2025
- Ramlegh Shopping Centre (Clyde) - 2025 / • Orana Shopping Centre (Clyde) - 2026





# சூறையாடப்படுகிறதா ஈரானின் எண்ணெய் வளம்?

## கொமேனி மகனின் இரகசிய சொத்து சாம்ராஜ்யம்

● ஐங்கரன் விக்கினேஸ்வரா

ஈரானில் பொருளாதார நெருக்கடி அதன் உச்சத்தைத் தொட்டுள்ளது. மக்கள் வேலைவாய்ப்பின்மை, பணவீக்கம் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வால் வீதிகளில் இறங்கிப் போராடி வருகின்றனர். ஆனால், இத்தனைத் துயரங்களுக்கு மத்தியிலும் ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கொமேனியின் மகன் மோஜ்தபா கொமேனி (Mojtaba Khamenei) வெளிநாடுகளில் பல ஆயிரம் கோடி டொலர் மதிப்பிலான சொத்துக்களை இரகசியமாகக் குவித்துள்ளதாக வெளிவந்துள்ள தகவல்கள் சர்வதேச அரசியலில் பெரும் புயலைக் கிளப்பியுள்ளன.

### லண்டன் முதல் ஜெர்மனி வரை: பரந்து விரிந்த சொகுசு வாழ்க்கை

56 வயதான மோஜ்தபா கொமேனி, உலகின் மிக விலையுயர்ந்த பகுதிகளில் தனது முதலீடுகளைப் பரப்பி வைத்துள்ளார். லண்டனின் மிகவும் ஆடம்பரமான 'Bishops Avenue' பகுதியில் உள்ள பங்களாக்கள் முதல் ஜெர்மனியின் ஐந்து நட்சத்திர விடுதிகள் வரை இவரது சொத்து சாம்ராஜ்யம் நீண்டுள்ளது. ஐரோப்பாவின் பல நாடுகளில் உயர்தர ஹோட்டல்கள், வணிகக் கட்டடங்கள் மற்றும் சொகுசு குடியிருப்புகளில் இவர் பல பில்லியன் டொலரை முதலீடு செய்துள்ளதாகப் புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### 'ஷெல் கம்பெனி' எனும் மாய வலை

இந்தச் சொத்துக்கள் எதுவுமே மோஜ்தபாவின் பெயரில் நேரடியாக இல்லை. அதற்குப் பதிலாக, 'ஷெல் கம்பெனி' எனப்படும் போலி நிறுவனங்கள் மற்றும் நம்பிக்கைக்குரிய பினாமிகளின் பெயர்களிலேயே இவை பதிவு செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக, அலி அன்சாரி என்ற ஈரானிய வங்கியாளர் மற்றும் பல வணிகர்களின் பெயர்களில் இந்தச் சொத்துக்கள் வாங்கப்பட்டுள்ளன. வரி ஏய்ப்புச் சொர்க்கங்கள் என்று அழைக்கப்படும் நாடுகளில் தொடங்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் மிகவும் நுட்பமான முறையில் இந்தப் பணப்பரிமாற்றங்கள் நடந்துள்ளன.

### மக்களின் வறுமையும் அதிகார ஆடம்பரமும்

ஈரானிய நாணயத்தின் மதிப்பு சரிந்து, சர்வதேசத் தடைகளால் மக்கள் வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கும் வேளையில், ஒரு மதத்தலைவரின் குடும்பத்தைச் சேர்ந்தவர் இவ்வளவு ஆடம்பரமான முறையில் சொத்துக்களைக் குவிப்பது பெரும் முரணாகப் பார்க்கப்படுகிறது.

ஈரானின் கச்சா எண்ணெய் விற்பனை மூலம் கிடைக்கும் வருவாய், சுவிட்சர்லாந்து, ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் பிரிட்டன் வங்கிகள் வழியாக வெளிநாடுகளுக்குத் திருப்பி விடப்பட்டதாகச் சந்தேகிக்கப்படுகிறது. மத ரீதியான கட்டுப்பாடுகளைக் கடுமையாகப் பின்பற்றும் ஒரு குடும்பத்திலிருந்து வந்தவர், இவ்வாறு வெளிப்படைத்தன்மையற்ற முறையில் செல்வம் ஈட்டுவது ஈரானிய இளைஞர்கள் மத்தியில் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

### போராட்டங்களுக்குத் தீனி போடும் ஊழல் புகார்கள்

ஈரானில் அண்மைக்காலமாக வெடித்துள்ள அரசுக்கு எதிரான போராட்டங்களுக்கு இந்தச் சொத்துக் குவிப்பு விவகாரமே முக்கியமான காரணமாகக் கூறப்படுகிறது. "நாங்கள் வறுமையில் வாடும்போது, ஆட்சியாளர்களின் வாரிசுகள் வெளிநாடுகளில் சொகுசு வாழ்க்கை வாழ்வதா?" என்ற கேள்வி ஈரானியத் தெருக்களில் எதிரொலிக்கிறது. சமூக ஊடகங்கள் வழியாகப் பரவி வரும் இந்தச் செய்திகள், ஆட்சிக்கு எதிரான மனநிலையை மேலும் வலுப்படுத்தியுள்ளன.

### சர்வதேசப் பின்னடைவு

அமெரிக்காவின் கடும் பொருளாதாரத் தடைகள் அமலில் இருந்தபோதிலும், இவ்வளவு பெரிய நிழல் பொருளாதாரத்தைச் செயல்படுத்தியது சர்வதேச உளவு அமைப்புகளின் கவனிப்பிற்கு உள்ளாகியுள்ளது. ஈரானின் எதிர்காலத் தலைவராகக் கருதப்படும் மோஜ்தபா கொமேனி மீதான இந்தப் புகார்கள், ஈரானியத் தலைமைக்கு உலக நாடுகளிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளன.

ஒரு நாட்டின் பொது வளங்கள் தனிநபர்களின் இலாபத்திற்காக எவ்வாறு திசைதிருப்பப்படுகின்றன என்பதற்கு மோஜ்தபா கொமேனியின் இந்தச் சொத்து குவிப்பு விவகாரம் ஒரு சான்றாக அமைந்துள்ளது. ஈரான் அரசு இதுவரை இதற்கு விளக்கம் அளிக்காத நிலையில், சர்வதேசப் பொருளாதார அமைப்புகள் இதுபோன்ற மறைமுக முதலீடுகள் மீது இனிவரும் காலங்களில் கடும் விதிகளைக் கொண்டு வர இந்தச் சம்பவம் ஒரு தூண்டுகோலாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. ■


THE SALVATION ARMY
Employment Plus
உங்களால் இப்போதும் முடியும்!
இந்தத் திட்டத்தில் சேருங்கள், மற்றும் 'ட்ராகன்' பொம்மை ஒன்றை இலவசமாகப் பெறுங்கள்!
வேலை இல்லாமலும், 6 வயதிற்குக் கீழ்ப்பட்ட குழந்தை ஒன்றைப் பராமரித்துக்கொண்டும் இருக்கிறீர்களா? அடுத்ததாக நீங்கள் என்ன செய்யலாம் என்பதைப் பற்றிப் பேசுவோம்.
தன்னம்பிக்கை மற்றும் திறன்களை வளர்த்துக்கொள்ளவும், வாழ்க்கைப் பாதை ஒன்றை ஏற்படுத்திக்கொள்ளவும் உதவ உங்களுடைய குடும்பத்திற்கு ஏற்ற, தனிநபர் ஒருவருக்கென வடிவமைக்கப்பட்ட ஆதரவுதவிகளை நாங்கள் அளிக்கிறோம்.
வாழ்க்கைத் தொழிலுக்கான வழிகாட்டல்கள்
குறுகிய-கால படிப்புகள் மற்றும் பயிற்சிகள்
குடும்ப சேவைகளுக்கான பரிந்துரைகள்
Parent Pathways
An Australian Government Initiative
இன்றே தொடர்புகொண்டு இதைப் பற்றி மேலும் தெரிந்துகொள்ளுங்கள்.
136 123
employmentplus.com.au


Sydney Multicultural Network
Presents
INTERNATIONAL
WOMEN'S DAY
CELEBRATION
8th MARCH 2026
QUAKERS HILL COMMUNITY CENTRE
7 LALOR PARK QUAKERS HILL
Time: 3:00pm to 7:00 pm
Let's celebrate our womanhood !!
PANEL DISCUSSION
FOOD STALLS
DANCES
GAMES
Entry
$5 PER PERSON
BRING 2 FRIENDS & GET 3rd TICKET FREE
further details
Beema : 0424 943 590
Lavanya : 0411 885 989
Sangeetha : 0450 450 191
Konthimathi : 0470248224
Community Supporters
PATCA
TAMIL ARTS
TOONGABBIE LEGAL CENTRE


இலவச பாலர் பள்ளி (Free Kinder): உங்களுடைய குழந்தையை 2026 ஆம் ஆண்டுக்குச் சேர்த்துக்கொள்ளுங்கள்.
PLATFORM 3
விக்டோரியாவில் மூன்று மற்றும் நான்கு வயது குழந்தைகளுக்கு இலவச பாலர் பள்ளி கிடைக்கிறது. இது குடும்பங்களுக்கு ஆண்டுக்கு சராசரியாக ஒரு குழந்தைக்கு $2,400 சேமிக்கும்.
இரண்டு வருட இலவச பள்ளி உங்களுடைய குழந்தையின் முக்கிய திறன்களை வளர்க்க உதவும், இதனால் அவர்கள் பள்ளியிலும் வாழ்க்கையிலும் சிறப்பாகச் செயல்படுவார்கள்.
இலவச பாலர் பள்ளி அனைவருக்கும் ஏற்றது. உங்களுக்கு ஒரு சுகாதாரப் பராமரிப்பு அட்டை அல்லது ஆஸ்திரேலிய குடியுரிமை (அல்லது அது போன்ற) தேவையில்லை.
மேலும் தகவல்களை vic.gov.au/kinder/tamil இல் அறியவும்.
VICTORIA State Government
Department of Education
KINDERGARTEN Victorian Government Approved
Best Start Best Life

எதிரொலி
ஆஸ்திரேலியா ETHIROLI
குரல்:08 அதிர்வு: 104 மாசி 2026 தொ.பே:1800 960 162

## ஆஸ்திரேலியா தினம்: வரலாற்றின் வலியை தமிழர் கொண்டாடலாமா?

ஜனவரி 26 ஐ ஆஸ்திரேலியா தனது தேசிய நாளாகப் பிரகடனம் செய்து பெருமையுடன் கொண்டாடும் நாள்.

இந்த நாளில் புதிய குடியேறிகளுக்கு குடியுரிமை வழங்கப்பட்டு, ஜனநாயகம், மனித உரிமைகள், பல்வகைமை, சமத்துவம் ஆகியவற்றை மதிக்கும் ஒரு முன்னேற்ற நாடாக ஆஸ்திரேலியா தன்னை உலகுக்கு முன்வைக்கிறது.

அரசியல் தலைவர்களின் உரைகள், தேசியக் கொடியின் கீழ் நடைபெறும் நிகழ்வுகள், பொதுமக்களின் கொண் டாட்டங்கள் – இவை அனைத்தும் அந்த நாட்டின் தேசிய அடையாளத்தை வலுப்படுத்தும் நிகழ்வுகளாக விளங்குகின்றன.

ஆனால், இந்த ஜனவரி 26 என்னும் திகதியின் உண்மையான வரலாற்றுப் பின்னணியை நாம் நேர்மை யாகப் பார்க்க வேண்டிய அவசியம் உள்ளது.

1788 ஜனவரி 26 – இங்கிலாந்து ஆக்கிரமிப்புப் படைகள் ஆஸ்திரேலியத் தரையில் முதன்முறையாகக் கால் பதித்த நாள். ஆனால், அந்த நிலம் வெறுமனே கிடந்ததல்ல. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக – சுமார் 60,000 ஆண்டுகளுக்கும் மேலாக – பூர்வக்குடியினர் அந்த நிலத்தில் வாழ்ந்து வந்தனர். அவர்களின் வாழ்க்கை இயற்கையோடு ஒன்றிணைந்ததாகவும், நிலம் அவர்களது சொத்தாக அல்ல, அவர்களது உயிரின் நீட்சியாகவும் கருதப்பட்டதாகும்.

இந்த பூர்வக்குடியினரின் பண்பாடு, மொழி, ஆன்மிக மரபு ஆகியவை உலகின் மிகப் பழமையான தொடர்ச்சியான மனித நாகரிகங்களில் ஒன்றாக வரலாற்று ஆய்வாளர் களால் மதிப்பிடப்படுகின்றன. ஆனால், ஆக்கிரமிப்பு தொடங்கியபின் நிகழ்ந்தது ஒரு சாதாரண அரசியல் மாற்றமல்ல – அது ஒரு பேரழிவு.

நிலங்கள் அபகரிக்கப்பட்டன. பூர்வக்குடியினர் தங்களது பாரம்பரிய வாழ்விடங்களிலிருந்து வலுக்கட்டாய மாக அகற்றப்பட்டனர். ஆயுதமற்ற மக்களுக்கு எதிராக ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன. பலர் கொல்லப்பட்டனர். பலர் நோய்களால் உயிரிழந்தனர். பல குழந்தைகள் தங்கள் குடும்பங்களிலிருந்து பிரிக்கப்பட்டனர்.

வரலாற்றில் குறிப்பிடப்படும் Myall Creek massacre போன்ற படுகொலைகள், இந்த ஆக்கிரமிப்பின் கொடூரமான முகத்தை வெளிப்படுத்துகின்றன. ஒருகாலத்தில் இலட்சக்கணக்கில் இருந்த பூர்வக்குடியினர் எண்ணிக்கை, ஆக்கிரமிப்புக்குப் பின் மிகக் குறுகிய காலத்திலேயே கடுமையாகக் குறைந்தது.

ஆனால், இந்த வரலாற்று அநீதிகளுக்கு முழுமையான நீதி கிடைத்ததா? இந்தக் கேள்வி இன்னும் பதிலின்றியே நிற்கிறது.

இதனால்தான், பல பூர்வக்குடியினரும், மனித உரிமை செயற்பாட்டாளர்களும், ஜனவரி 26 ஐ "Australia Day" என அல்ல, "Invasion Day" – ஆக்கிரமிப்பு நாள் – எனக் குறிப்பிடுகின்றனர். அது அவர்களுக்கான கொண்டாட்ட நாள் அல்ல் அது அவர்களது இழப்பின் நினைவு நாள்.

இந்த உணர்வை நாம் புரிந்துகொள்ள முடியாதா?

இலங்கையில் மே 18 முள்ளிவாய்க்கல் இனப்படுகொலை தமிழ் மக்களின் வரலாற்றில் ஒரு ஆழ்ந்த காயத்தின் நாளாகக் கருதப்படுகிறது. அந்த நாளில் ஆயிரக்கணக்கான உயிர்கள் இழக்கப்பட்டன. தமிழ் மக்கள் அந்த நாளை நினைவு நாளாகக் கடைப்பிடிக்கின்றனர்.

அந்த நாளில், யாராவது அதை "வெற்றி நாள்" எனக் கொண்டாடினால் அது எவ்வளவு வலியை ஏற்படுத்தும்?

அதேபோல, ஜனவரி 26 – பூர்வக்குடியினரின் வரலாற்று துயரத்தின் நாளாக இருக்கும் போது – அதை கொண்டாடுவது அவர்களது வரலாற்று வலியை புறக்கணிப்பதாக இல்லையா?

இந்தச் சூழலில், தமிழர் அடையாளத்துடன் செயற்படும் சில தமிழ் அமைப்புகள் ஆஸ்திரேலியா தினத்தை உற்சாகமாகக் கொண்டாடியிருப்பது கவலையை ஏற்படுத்தியுள்ளது.

தமிழர் சமூகமே வரலாற்று அநீதியின் வலியை அனுபவித்த சமூகமாகும். இனஅழிப்பு, இடம்பெயர்வு, நினைவுகூரல் – இவை எவ்வளவு ஆழமான உணர்வுகளோ, அதை நாமே அனுபவித்திருக்கிறோம்.

அப்படியான ஒரு சமூகமாக நாம், இன்னொரு இனத்தின் வரலாற்று வலியோடு தொடர்புடைய நாளை கொண்டாடுவது அறம் சார்ந்து சரியானதா?

இது ஒரு மனசாட்சி சார்ந்த கேள்வி.

ஒரு நாட்டின் குடிமகனாக அந்த நாட்டின் தேசிய நாளை மதிப்பது புரிந்துகொள்ளக்கூடிய ஒன்று. ஆனால், அதே நேரத்தில் அந்த நாளின் வரலாற்று உண்மையையும், அதன் மறுபக்கத்தில் இருக்கும் மக்களின் வலியையும் புரிந்துகொள்வது நமது மனிதாபிமானப் பொறுப்பு அல்லவா?

வரலாற்றை மறந்து கொண்டாடுவது எளிது.

ஆனால், வரலாற்றை நினைவில் வைத்துக்கொண்டு, நீதியின் பக்கம் நிற்பது தான் உயர்ந்த மனிதநேயத்தின் அடையாளம்.

தமிழர் சமூகமாக நாம் எப்போதும் நீதிக்காக குரல் கொடுத்திருக்கிறோம். அப்படியான நாம், மற்றொரு சமூகத்தின் வரலாற்று நீதிக்கான உணர்வையும் மதிக்க வேண்டிய கடமை கொண்டுள்ளோம்.

# மெல்லப் பலம் பெறும் என்.பி. பி.!

● கருணாகரன்

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தேசிய மக்கள் சக்தியும் தீர்வைத் தரப்போவதில்லை என்பது தெளிவாகியுள்ளது. எந்தப் பிரச்சினைக்கும் எந்தப் பதிலையும் உறுதியாகவோ வெளிப் படையாகவோ சொல்லாமல் தந்திரமாக நாட் களைக் கடத்தும் உபாயத்தைக் கையாள்கிறது NPP அரசாங்கம்.



இனப்பிரச்சினைக்குத் தீர்வு, மாகாணசபைகளுக்கான தேர்தல், வடக்கு-கிழக்கில் பௌத்த சிங்கள விரிவாக்கச் செயற்பாடுகள், பொருளாதார மறுசீரமைப்பு - புதிய பொருளாதார முன்னெடுப்பு, மலையக மக்களின் காணி மற்றும் வீட்டுரிமைப் பிரச்சினைகள் என எதற்கும் பொறுப்பான பதிலை ஜனாதிபதி அநுரகுமார திஸ நாயக்கவோ, பிரதமர் ஹரிணி அமரசூரியவோ சொல்வ தில்லை. மட்டுமல்ல, ஒவ்வொரு பிரச்சினையையும் எந்த அடிப்படையில், எவ்வளவு கால எல்லைக்குள் தீர்வு காண்பது என்றும் பேசுவதில்லை. அல்லது ஒவ்வொரு விடயத்தையும் எந்த அடிப்படையில், எவ்வளவு கால எல்லைக்குள் முன்னெடுத்துச் செயற்படுத்துவது என்றும் கூறுவதில்லை. பதிலாக இவை தொடர்பாக பிரதி அமைச்சர்கள், NPP யின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டத்தில் அங்கங்கே சில வார்த்தைகள் சொல்லப்படும். அதாவது அரசாங்கம் இந்தப் பிரச்சினைகளில் அக்கறையோடு செயற்படுகிறது. நிச்சயமாக மாற்றங்களை உருவாக்கும் என்று அவர்கள் அங்கங்கே சொல்லி, எல்லாவற்றுக்கும் தீர்வு காணும் அக்கறை அரசாங்கத்துக்குண்டு என்றவொரு தோற்றப் பாட்டை உருவாக்குவதற்கு முயற்சிக்கிறார்கள். இது தேசிய மக்கள் சக்தியின் ஆளும் நிலைப்பாட்டுக்கான உபாயமாகும்.

இந்த மாதிரியானதொரு உபாயத்தையே முன்பு ரணில் விக்கிரமசிங்கவும் கையாண்டு வந்தார். எதையும் உரத்த குரலிலோ, உறுதிபடவோ ரணில் சொல்வதில்லை. ஆனால், தந்திரமாகக் காய்களை நகர்த்துவார். ஐம்பது ஆண்டுக்கும் அதிகமான அரசியல் வரலாற்றைக் கொண்ட ரணில் விக்கிரமசிங்க ஐந்து தடவைக்கு மேல் பிரதமராக இருந்தி ருக்கிறார். ஒரு தடவை ஜனாதிபதியாகப் பதவி வகித்திருக் கிறார். அரசியல் வாழ்வைத் தொடங்கிய காலத்திலிருந்து பல்வேறு துறைகளின் அமைச்சராகவும் எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்திருக்கிறார். இப்படியெல்லாம் இருந் தும் இலங்கையின் எந்த நெருக்கடிக்கும் ரணில் விக்கிரமசிங்க தீர்வைக் கண்டதேயில்லை. ஆனால், வெற்றிகரமாக அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தித் தன்னுடைய அரசியற் காலத்தைக் கடத்திக் கொண்டார்.

ஏறக்குறைய அநுரகுமார திஸநாயக்கவும் இத்தகைய தொரு உபாயத்தை - தந்திரத்தைத்தான் கையாள்கிறார்.

ஆனால், தேசிய மக்கள் சக்தி, இனப்பிரச்சினைக்கு மட்டுமல்ல, இலங்கையின் அனைத்துப் பிரச்சினைக்குத் தீர்வைத் தரும் - தீர்வை எட்டும் என்று சிலர் அடித்துச் சொல்கிறார்கள். அவர்களுடைய நம்பிக்கைக்கு எதைப் பரிசாகக் கொடுப்பது என்று தெரியவில்லை. அவர்களைப் பொறுத்தவரையில் தேசிய மக்கள் சக்தியும் அதற்குத் தலைமை தாங்கும் அநுரகுமார திஸநாயக்கவும் சர்வரோக நிவாரணிகள். இதொரு முட்டாள்தனமான நம்பிக்கை. அடிப்படைகளற்ற எந்த நம்பிக்கையும் முட்டாள்தனமானதே. தேசிய மக்கள் சக்தி ஆட்சி அதிகாரத்துக்கு வந்து ஓராண்டு முடிந்து விட்டது. அநுரகுமார திஸநாயக்க ஜனாதிபதிப் பொறுப்பேற்று ஒன்றரை ஆண்டுகளாகிறது. போதைப்பொருள் ஒழிப்பு, ஊழல் தடுப்பு, ஊழல்வாதிகள் கைது, புதிய கல்விக் கொள்கைக்கான ஏற்பாடுகள் என்றவாறாக நடவடிக்கைகள் அமைந்துள்ளனவே தவிர, பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்சியைக் காண்பதற் கான புதிய பொருளாதாரக் கொள்கையோ, திட்டமோ இன்னும் உருவாக்கப்படவில்லை. அதற்கான முயற்சிகள் நடப்பதாகவும் தெரியவில்லை. அப்படித்தான் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான எந்த நடவடிக்கை களையும் முயற்சிகளையும் காணமுடியவில்லை. குறைந்த பட்சம் தீர்வுக்கு முன்னர் நடைமுறைப்படுத்த வேண்டிய மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கே அரசாங்கம் பின்னடிக்கிறது. தேர்தல் நடக்கும் என்று NPP யின் ஒரு தரப்புச் சொல்கிறது. தேர்தல் நடத்துவது சாத்தியமில்லை என்று NPP யின் இன்னொரு தரப்பு மறுக்கிறது. இது திட்டமிட்ட ஏய்ப்பு அன்றி, வேறென்ன? அரசியலமைப்பு மாற்றம் நடக்கும் என்று ஒரு தரப்புச் சொல்கிறது. அது இப்போதில்லை என்று இன்னொரு தரப்புக்கூறுகிறது.

இதையெல்லாம் எப்படி விளங்கிக் கொள்வது? அல்லது இந்த மாதிரிச் செயற்பாடுகளுக்கு என்ன பெயர்?


ஏற்கனவே அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் போதைப்பொருள் ஒழிப்பு, ஊழல் தடுப்பு, ஊழல் வாதிகள் கைது, புதிய கல்விக் கொள்கைக்கான ஏற்பாடுகள் போன்றவற்றிலும் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்று சொல்ல முடியவில்லை. கல்விக் கொள்கையை ஆதரிப்பதா,

(07ஆம் பக்கம் பார்க்க)

## வாசகர் களம்

எதிரொலியில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்கள் குறித்து வாசகர் களின் கருத்துகள் எதிர்பார்க்கப்படுகின்றன. காத்திரமான கருத்துகள் பிரசுரிக்கப்படும். அதுமட்டுமின்றி எதிரொலி பேசாத சமூக கருத்துகளையும் எழுதி அனுப்புங்கள்.

நன்றி
ஆசிரியர்பீடம், எதிரொலி



editor@ethiroli.com
PO Box 6313, Dandenong
Victoria 3175

# மெல்லப் பலம் பெறும் என்.பி. பி.!



(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்ப்பதா என்பதையும் விட அதை நடைமுறைப்படுத்துவதற்கு முயற்சிக்கும் கல்வி அமைச்சரும் பிரதமருமான ஹரிணியை எதிர்த்து முடக்குவதற்கே NPP க்குள்ளும் வெளியிலும் மும்முரமான முயற்சிகள் நடக்கின்றன. ஊழல்வாதிகளைக் கைது செய்வதிலும் பெரிய முன்னேற்றம் எதுவும் இல்லை. அதாவது வெளியே சொல்லப்பட்ட - மக்களுக்கு உறுதி அளித்த அளவுக்கு முந்திய ஆட்சியாளர்களில் (ஊழல்வாதிகளில்) NPPகைவைக்கவில்லை. இதுவரையில் பிடித்து உள்ளே போடப்பட்டிருப்பவர்கள் ஓரத்தில் இருந்த சிறிய எறும்புகளே. இதனால்தான் NPPயின்மீது கேள்விகளும் சந்தேகமும் வலுக்கின்றன.

இதேவேளை இலங்கையின் இன்றைய அரசியல் யதார்த்தத்தில் NPPக்குப் பதிலாக - மாற்றாக வேறு தெரிவுகள் இல்லை என்பதையும் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். NPPயைத் தவிர்த்தால், சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியை ஆதரிக்கலாமா என்றால், சஜித்தான் கடந்த ஆட்சியில் 1000 விகாரைகள் திட்டத்தை உருவாக்கிய நாயகனாக இருக்கிறார். இலங்கைக்குத் தேவை தொழிற்சாலைகளே தவிர, விகாரைகளோ, தேவாலயங்களோ, கோயில்களோ, மசூதிகளோ இல்லை. உலகத்திடம் கையேந்தி, கடன்வாங்கி ஆட்சியை நடத்தும் அரசாங்கத்தின் நிதியில் மத நிறுவனங்களை வளர்ப்பது மூடத்தனத்தை வளர்ப்பதாகவே அமையும். அப்படியான ஒருவரை எப்படி நம்பி ஏற்றுக் கொள்வது? அடுத்தது பொதுஜன பெரமுன. இந்த நாட்டைக் கொள்ளையடித்துக் குட்டிச்சுவராக்கியவர்கள் என்று பகிரங்கமாகவே குற்றம்சாட்டப்பட்டிருக்கும் ராஜபக்ஸவினரை எந்த அடிப்படையில் மறுபடியும் அதிகாரத்துக்குக் கொண்டு வருவது? மட்டுமல்ல, அவர்கள் இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு எதிர்வளமாகச் சிந்திப்பவர்கள். ஆகவே அவர்களும் பொருத்தமான தெரிவல்ல. மிஞ்சுவது, சக்குப் பிடித்துப்போன ரணில் தரப்புத்தான். அவர்கள்தானே எதற்குமே பொருத்தமற்றவர்கள் என்று சனங்களால் நிராகரிக்கப்பட்டிருக்கிறார்கள். என்றால், இனி எந்த அடிப்படையில் அவர்களை அப்படியே ஏற்றுக் கொள்வது?

இதுதான் மிகப் பெரிய துயரமும் அவலமுமாகும். இதுதான் NPPக்கும் வாய்ப்பாக உள்ளது.

இந்த யதார்த்தப் பின்னணியில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை எப்படிக் கையாள்வது என்ற கேள்வி எழுகிறது. இதில் ஒவ்வொரு சமூகத்தினரும் ஒவ்வொரு விதமாகச் சிந்திக்கின்றனர். சிங்கள மக்களைப் பொறுத்தவரையில் ஊழல்வாதிகள் தண்டிக்கப்படாமல் விட்டாலும் பரவாயில்லை. புதிய அரசியலமைப்பு வந்தாலென்ன, விட்டாலென்ன? மாகாணசபைத் தேர்தல் நடந்தால் என்ன? நடக்காமல் போனாலென்ன? இனிமேல் ஊழலற்ற, பொருளாதார சுபீட்சத்தை நோக்கிய ஒரு ஆட்சி இருந்தால் போதும் என்றே அவர்கள் சிந்திக்கிறார்கள். இது பெருந்திரள் சிங்கள மக்களை அடிப்படையாகக் கொண்ட அவதானிப்பும் கருத்துமாகும். இதை உள ரீதியாக நிறைவு செய்யக் கூடிய அளவுக்கு அரசாங்கத்தின் எளிமையான நடவடிக்கைகளும் ஜனாதிபதி, பிரதமர் போன்றோரின் தனிப்பட்ட - பகிரங்க நடமாட்டங்களும் அமைகின்றன. மிக எளிமையாக, தாங்கள் நெருங்கிப் பார்க்கக் கூடிய ஒருவராக ஜனாதிபதி இருக்கிறார் என்பது பெரும்பாலான மக்களுடைய எண்ணமாகும். ஆக, அநுரகுமார திஸநாயக்க என்ற தங்கக் குதிரை உள்ளவரை தேசிய மக்கள் சக்தியின் கதிரைக்குப் பிரச்சினையில்லை.

தமிழ்ச் சமூகத்தில் முக்கியமாக இரண்டு விதமான நோக்குநிலையைக் கொண்ட தரப்புகள் உண்டு. ஒன்று, தேசிய மக்கள் சக்தியை நம்பி, அந்த மாயக்குதிரைக்குப் பின்னால் மகிழ்ச்சியோடு செல்லும் - செல்ல விரும்பும் தரப்பு. மற்றது, NPPயை நம்ப முடியாது என்று வெளியே நிற்கும் தமிழ்த்தேசியவாதத் தரப்பு. இதற்குள் சிறிய - குட்டிக்குட்டி - அணிகள் உண்டு. அடிப்படையில் அவையெல்லாம் ஒரு தரப்பே. ஆனால், இரண்டு தரப்புகளும் இன்றைய நிலையில் அரசியல் வலுவற்றவையே. தேசிய மக்கள் சக்தியை ஆதரிக்கும் தரப்பு, எந்த வகையிலும் அரசாங்கத்தில் செல்வாக்கைச் செலுத்த முடியாத ஒன்றாகவே உள்ளது. குறைந்த பட்சம், வடக்கு- கிழக்கில் உள்ள எந்தச் சிறிய - தனித்துவமான எத்தகைய வேலைத்திட்டங்களையும் முன்னெடுக்கக் கூடியதாக இல்லை. இதற்கு இரண்டு எளிமையான உதாரணங்களைச் சொல்ல முடியும்.

1. மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்துங்கள். அது தமிழ்பேசும் மக்களுடைய எதிர்பார்ப்பும் அடிப்படைத் தேவையுமாகும் என்பதை NPPஐ ஆதரிக்கும் தமிழ் பேசும் ஆதரவாளர்களும் சரி, NPPயில் அங்கத்துவம் வகிக்கும் தமிழ்பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகரசபை, மாநகரசபை, பிரதேச சபை உறுப்பினர்கள், தமிழ்பேசும் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் என ஒரு பெரிய குழாத்தினர் இருக்கின்றபோதும் பேசுவதோ, அழுத்தம் கொடுப்பதோ இல்லை. அப்படி அழுத்தம் கொடுக்கக் கூடிய நிலையில் அவர்கள் இல்லை என்பது மட்டுமல்ல, NPPயும் இடமளிப்பதில்லை.

2. வடக்கு-கிழக்கில் பலாலி விமான நிலையம், காங்கேசன்துறைத் துறைமுகம், ஆனையிறவு உப்பளம், கிழக்கில் பிற தொழிற்சாலைகள் உள்ளிட்ட எதையும் சீராக - முழுமையான அளவில் விரிவாக்கம் செய்து வளர்த்தெடுப்பதற்கு அரசாங்கத்தைக் கோரவோ, பொறுப்பெடுத்துச் செயற்படுத்தவோ முடியாதவர்களாகவே உள்ளனர்.

ஆக இந்தத் தரப்பு நானும் ரவுடிதான் என்று வலுக்கட்டாயமாக பொலிஸ் வண்டியில் அடம்பிடித்து ஏறும் நடிகர் வடிவேலுவின் நகைச்சுவைக் காட்சியையே நினைவூட்டுகின்றது. இவர்களுடைய பேச்சுகளும் நடவடிக்கைகளும் நமக்குச் சிரிப்பூட்டுகின்றன. ஆனால், நாம் இதையெல்லாம் பார்த்து ரசிக்கும்படியாகவோ சிரிக்கும்படியாகவோ தானா வாழ்கிறோம். ஒரு பெரிய போரினால் முற்றாகவே சிதைக்கப்பட்ட சமூகத்தின் மக்களல்லவா!

அப்படியென்றால், இந்தக் குறைபாடுகளை நீக்கி, சிதைக்கப்பட்ட சமூகத்தின் பிரதிநிதிகளாக அல்லது அவ்வாறு தம்மை அடையாளப்படுத்த முற்படும் தமிழ்த்தேசியவாத சக்திகள் இந்த இடத்தில் மிக விழிப்பாகவும் உறுதியாகவும் மிக நுட்பமாகவும் மிகத்தீவிரமாகவும் தொழிற்பட வேண்டும். ஆனால், அதை எந்தக் கட்சியும் செய்யவே இல்லை. தமிழ்த்தேசியவாத அரசியலை மென்நிலையிலும் தீவிர நிலையிலும் முன்னெடுக்கும் இரண்டு போக்குகள் உண்டு. ஒரு போக்கு கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிவஞானம் சிறிதரன், சிவாஜிலிங்கம், ஐங்கரநேசன் போன்றோர் பிரதிநிதித்துப்படுத்தும் தீவிர நிலைப்போக்கு. மற்றது சுமந்திரன், ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தரப்பினர்.

இந்த இரண்டு தரப்பும் 2009 க்குப் பிறகு, கடந்த 16 ஆண்டு கால அரசியலில் எதையும் சாதிக்கவில்லை. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாக இருந்தபோதும் எதையும் செய்யவில்லை. அதிலிருந்து முரண்பட்டுப் பிளவுபட்டுப் பிரிந்து நின்றும் சாதிக்கவில்லை. இப்பொழுது கட்சிகளுக்குள்ளேயே குத்துவெட்டுப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். ரெலோ, தமிழரசுக்கட்சி, முன்னணி போன்றவை பிளவுபட்டுள்ளன. உள்முரண்பாடுகளால் தமிழரசுக்கட்சியும் ரெலோவும் நீதிமன்றம் வரை சென்று விட்டன. சனங்கள் இப்பொழுது இந்தக் கட்சிகளின் உள் வீட்டுப் பிரச்சினையைக் கண்டு கொதிப்போராகவும் ரசிப்போராகவும் மாறியுள்ளனர். ஆனால், எல்லோருக்கு மேலும் துயரச் சுமைகளும் அபாயக் கத்திகளுமே அசைந்தாடிக் கொண்டிருக்கின்றன.

தெற்கில் பலமான எந்த அரசியற் சக்தியும் இல்லை. ரணில் - சஜித் அணிப்போட்டி முடிவுக்கு வரவில்லை. புதிதாக வேறெந்தக் கூட்டணியோ சக்தியோ உருவெடுக்கவும் இல்லை.

இந்த நிலையில் அடுத்து என்ன நடக்கும்? அடுத்தாக என்ன செய்வது என்று யாருக்குமே தெரியவில்லை. ஆனால் NPP சத்தமில்லாமல் தன்னைப் பலப்படுத்துவதில் மிக நுட்பமாகச் செயற்படுகிறது. அரசியல் ரீதியாக சீனா, அமெரிக்கா, இந்தியா, ஐரோப்பிய நாடுகள் என வல்லாதிக்கச் சக்திகளை அது திறமையாக - தனக்கு வாய்ப்பாகக் கையாள்கிறது. புலம்பெயர் சமூகத்தை அநுரகுமார திஸநாயக்க, ஹரிணி, ரில்வின் போன்றோர் தனிப்பட வசப்படுத்தி வைத்துள்ளனர். உள்ளூரில் அபிவிருத்திக் குழுக்கள் என்ற பேரில் கிராமியக் கட்டமைப்புகளை விரிவாக்கி, விரைவுபடுத்தித் தன்னைப் பலப்படுத்துகிறது. வெளியே உள்ள எதிர்த்தரப்புகளின் பலவீனத்தையும் NPPதனக்குச் சாதகமாக்கிக் கொண்டிருக்கிறது.

மக்கள்?

ஆம், மக்கள் எப்போதும் போல இருண்ட பாதையில் நடந்து கொண்டிருக்கிறார்கள்.

■

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI



# வெறுப்புக்கு முற்றுப்புள்ளி: ஆஸியை அதிரவைக்கும் புதிய சட்டங்களும் முடக்கப்பட்ட தீவிரவாத அமைப்புகளும்!

● ஐங்கரன் விக்கினேஸ்வரா

அவுஸ்திரேலிய மண்ணில் வேரூன்றியிருந்த தீவிரவாத அமைப்புகளின் அத்திபாரம் தற்போது ஆடத் தொடங்கியுள்ளது. அவுஸ்திரேலியாவில், புதிய ‘வெறுப்புப் பேச்சுக்கு எதிரான சட்டத்தின்’ (Hate Speech Legislation) அதிரடி விளைவாக, ‘National Socialist Network’ (NSN) போன்ற நவ-நாசிச அமைப்புகள் தங்களைக் கலைப்பதாக அறிவித்துள்ளன. மேலும் ‘White Australia Party’ மற்றும் ‘European Australian Movement’ போன்ற பல தீவிரவாத குழுக்கள் இந்த புதிய சட்டங்களின் பின்னர் தங்கள் செயற்பாட்டு நடவடிக்கைகளை முழுமையாக நிறுத்த முடிவு செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளன. இது ஒரு சாதாரண அரசியல் நகர்வு அல்ல் அவுஸ்திரேலியாவின் சமூகப் பாதுகாப்பில் ஏற்பட்டுள்ள ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாற்றமாகும்.



### பொண்டி கடற்கரை படுகொலை: சட்ட மாற்றத்தின் வினையூக்கி

கடந்த ஆண்டு டிசெம்பர் 14 அன்று, சிட்னியின் பொண்டி (Bondi) கடற்கரைப் பகுதியில் யூதர்களின் ஹனுக்கா விழாக் கொண்டாட்டத்தின் போது நிகழ்ந்த துப்பாக்கிச் சூடு அவுஸ்திரேலியாவையே உலுக்கியது. 10 வயது சிறுமி மடில்டா உட்பட 15 உயிர்கள் பறிக்கப்பட்ட இந்தச் சம்பவம், அந்நாட்டு அரசாங்கத்தை அதிரடி முடிவுகளை எடுக்கத் தூண்டியது. இத்தாக்குதலில் ஈடுபட்டதாகக் கருதப்படும் சாஜித் அக்ரம் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டார், அவரது மகன் நவீத் அக்ரம் கைது செய்யப்பட்டார். இத்தாக்குதல் இஸ்லாமியத்தீவிரவாத அமைப்புகளால் தூண்டப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

### சட்டத்தின் பிடியில் சிக்கும் ‘வெறுப்பு’

பிரதமர் அந்தோனி அல்பனீஸ் தலைமையிலான லேபர் கட்சி அரசு, ‘யூத எதிர்ப்பு, வெறுப்பு மற்றும் தீவிரவாதத்தை எதிர்த்துப் போராடும் மசோதா 2026’ ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. இச்சட்டத்தின் முக்கியமான அம்சங்கள் பின்வருமாறு:

கடுமையான சிறைத்தண்டனை: வெறுப்புக் குழுக்களின் தலைவர்களுக்கு 15 ஆண்டுகள் வரையிலும், உறுப்பினர்களுக்கு 7 ஆண்டுகள் வரையிலும் சிறைத்தண்டனை விதிக்கப்படும்.

விசா ரத்து: வெறுப்பைப் பரப்புபவர்களின் விசாக்களை ரத்து செய்யும் அதிகாரம் உள்துறை அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ளது.

துப்பாக்கிக் கட்டுப்பாடுகள்: ஒரு நபர் 5 துப்பாக்கிகளை மட்டுமே வைத்திருக்க முடியும் என்ற கட்டுப்பாடுடன், அரசே பொதுமக்களிடம் உள்ள மேலதிக துப்பாக்கிகளைப் பணம் கொடுத்து வாங்கி அழிக்கும் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.



### விமர்சனங்களும் அரசியல் பிளவுகளும்

ஒருபுறம் இந்தச் சட்டம் வரவேற்கப்பட்டாலும், மறுபுறம் ‘கருத்துச் சுதந்திரம்’ (Freedom of Speech) பறிபோவதாகக் குரல்கள் எழுகின்றன. லிபரல் மற்றும் கிரீன்ஸ் கட்சிகள் இந்த மசோதாவுக்கு ஆரம்பத்தில் கடும் எதிர்ப்புத் தெரிவித்தன.

மதச் சலுகை விவாதம்: மத நூல்களை மேற்கோள் காட்டிப் பேசுபவர்களுக்குத் தண்டனையிலிருந்து விலக்கு அளிக்கும் பிரிவை நீக்க வேண்டும் என யூத அமைப்புகள் கோரியுள்ளன. “மத நூல்கள் வெறுப்பைப் பரப்புபவர்களுக்கு ஒரு சட்ட ஓட்டையாக அமைந்துவிடக் கூடாது” என்பதே அவர்களின் வாதம்.

இதேவேளை, எதிர்க்கட்சியான லிபரல் கட்சிக்குள் சுசன் லீயின் தலைமைத்துவத்திற்கு இந்தச்சட்டம் ஒரு பெரும் சவாலாக மாறியுள்ளது. நிழல் அமைச்சரவையின் முடிவை மீறி நேஷனல்ஸ் கட்சி கூட்டணியை முறிக்கத் துணிந்தது அவுஸ்திரேலிய அரசியலில் பெரும் அதிர்வை ஏற்படுத்தியுள்ளது.

### எதிர்கால அவுஸ்திரேலியா

“இன வெறுப்பை விதைக்கும் எந்தவொரு அமைப்பும் இனி நாட்டில் அனுமதிக்கப்படாது” என உள்துறை அமைச்சர் டோனி பேர்க் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். பல்லினக் கலாசாரத்தைக் கொண்ட ஒரு நாட்டில், தனி மனித உரிமைகளுக்கும் சமூகப் பாதுகாப்பிற்கும் இடையிலான மெல்லிய கோட்டினை, இந்தச் சட்டங்கள் எவ்வாறு கையாளப்போகின்றன என்பதை உலகம் உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறது.

அவுஸ்திரேலியாவின் இந்த அதிரடி நடவடிக்கைகள், வெறுப்புப் பேச்சால் சூழப்பட்டுள்ள ஏனைய நாடுகளுக்கும் ஒரு முன்னோடியாக அமையக்கூடும். ■


Sai Shree Foods
Pty. Ltd.
AUSTRALIA - CANADA - INDIA
REMARKABLE QUALITY
AND RELISHING TASTE.
If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.
We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)
HEAD OFFICE: Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175
DISTRIBUTORS: Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin

# பிள்ளைக்கறியும், பெருந்திணையும்

# எப்ஸ்டீன் ஆவணங்கள்

● ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

ஏறிய மடல் திறம் இளமை தீர் திறம்
தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே.

- தொல்காப்பியம் -



நான் பத்தாம் வகுப்பு படிக்கும்பொழுது எங்களுக்கு சங்க இலக்கியத்தில் வரும் திணைகள் பற்றிய பாடம் இருந்தது. எங்கள் தமிழாசிரியர் எல்லாத்திணைகள் பற்றியும் விளக்கிய பிறகு இரண்டு திணைகள் பற்றி எதுவும் சொல்லாமல் விட்டுவிட்டார். நாங்கள் ஏன் என்று கேட்டதற்கு" உங்களுக்கு சொன்னால் புரியாது . உங்களுக்கே வளர்ந்த பிறகு தெரிந்துவிடும்" என்று சொன்னார். அந்தக் காலத்தில் இணையமோ அல்லது இப்பொழுது இருப்பது போல சமூக ஊடகங்களோ கிடையாது. ஆதலால் நாங்கள் அந்த இரண்டு திணைகளைப் பற்றி கோனார் உரையில் என்ன எழுதியிருந்தார்களோ அதையே நெட்டுரு செய்து தேர்வு எழுதினோம். அந்த இரண்டு திணைகள் என்ன தெரியுமா? பெருந்திணை ,கைக்கிளை. கைக்கிளை திணையைப் பற்றி வேறு ஒரு நேரத்தில் பேசலாம். இப்பொழுது உலகையே அதிர்ச்சியுள்ளக்கியிருக்கும் பெருந்திணையான Jeffery Epstein-ன் ஆவணங்களைப் பற்றி பேசலாம்.

எப்ஸ்டீன் தனது 21ஆம் வயதில் எந்தப் பட்டமும் பெறாமலேயே கணிதம் மற்றும் இயற்பியல் ஆசிரியராக தனது வாழ்க்கையைத் தொடங்கினார். பிறகு 1976ஆம் ஆண்டு பள்ளியிலிருந்து பணிநீக்கம் செய்யப்பட்ட பிறகு, வங்கி மற்றும் நிதித் துறையில் நுழைந்து, தொழில் நுணுக்கங்களை கற்றுக்கொண்ட பிறகு சொந்தமாக தனது நிறுவனத்தைத் தொடங்கினார். பில்லியனர்களுக்கு வரி மற்றும் நிலம் வாங்கி விற்பது தொடர்பான சேவைகளை வழங்குவதன் மூலம் பெரும் பணம் சம்பாதித்தார், பெரும் பணம் ஈட்டிய பிறகு அரசியல்வாதிகள்,உயரதிகாரிகள் மற்றும் பெரும்பணக்காரர்களின் நட்பினை ஏற்படுத்திக்கொண்டதன் மூலம் பெரும் செல்வாக்கு எல்லாத்தரப்பிலும் அவனுக்கு கிடைத்தது. மித மிஞ்சிய பணம், அளவு கடந்த அதிகாரச் செல்வாக்கு இருக்கும் தைரியத்தில் பல வயது குறைந்த பெண்களை கடத்திக்கொண்டுவந்து பாலியல் பலாத்காரம் செய்வது மற்றும் கொலை என்று அவன் மீது ஏகப்பட்ட குற்றச்சாட்டுகள் எழுந்தன.

14 வயது பெண்ணை பலாத்காரம் செய்த குற்றத்துக்காக 2005ஆம் ஆண்டு வழக்குத் தொடரப்பட்டு பிறகு 2006 ஆம் ஆண்டு நடந்த விசாரணையில் 18 மாதம் சிறைத் தண்டனை எப்ஸ்டீனுக்குக் கிடைத்தது. ஆனால் வழக்கு நடந்துகொண்டிருக்கும் நேரத்தில், ஒரு சர்ச்சைக்குரிய ஒப்பந்தம் நீதிமன்றத்தால் செய்யப்படுகிறது, அதாவது எப்ஸ்டீன் ஆயுள் தண்டனையை எதிர்கொள்ள நேரிடும் (18 வயதுக்கு கீழான பெண்களை பலாத்காரம் மற்றும் விபசாரத்துக்கு உட்படுத்துதல்) குற்றங்களிலிருந்து விடுவிக்கப்பட்டான். நன்னடத்தை(?) காரணமாக 13 மாதங்களில் சிறைத்தண்டனையிலிருந்தும் விடுவிக்கப்பட்டான். 2009-2018ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் தொடர்ந்து பல நூறு பெண்கள் எப்ஸ்டீன் மேல் பாலியல் பலாத்கார குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர். 2000களின் முற்பகுதியில் இருந்த பாலியல் கடத்தல் குற்றச்சாட்டில் எப்ஸ்டீன் நியூயோர்க்கில் 2019ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டான். பதின்பருவ சிறுமிகளுக்கு 'மசாஜ்' செய்வதற்காக பணம் கொடுத்தது , புளோரிடா மற்றும் நியூயோர்க்கில் உள்ள தனது வீடுகளில் அவர்களை பாலியல் வன்கொடுமை செய்தது போன்ற பல குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டவருக்கு பிணை மறுக்கப்பட்டது. பிறகு ஒகஸ்ட் 2019ஆம் ஆண்டு மர்மமான முறையில் நியூயோர்க் சிறையில் இறந்து போனார். தற்கொலை செய்து இறந்து கொண்டாரென பொலிஸ் இந்த வழக்கினை முடித்துக்கொள்கிறது

அமெரிக்க நீதித்துறை வசம் உள்ள எப்ஸ்டீன் தொடர்பான 6 மில்லியன் ஆவணங்களில் இதுவரை 3.5 மில்லியன் ஆவணங்கள் மட்டுமே பொதுமக்களுக்கு வெளியிடப்பட்டுள்ளன. இந்த ஆவணங்களின் மூலம் யாரெல்லாம் எப்ஸ்டீனுடன் பழகியிருந்தனர். குறிப்பாக அவரின் தனித்தீவில் காமக்களியாட்ட விளையாட்டுகளுக்கு அவரது லோலிட்டா எக்ஸ்பிரஸ் எனப்படும் விமானத்தில் பயணித்தனர் போன்ற எல்லா விபரங்களும் நமக்கு கிடைக்கின்றன. அதாவது 2008 ஆம் ஆண்டு பதின்பருவக் குழந்தைகளுடன் பாலியல் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுகளில் அவர் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்ட பிறகும், எப்படி இந்த உயர்தர வர்க்கத்தினர் எப்ஸ்டீனுடன் நெருக்கமான நட்பு உறவுகளைப் பேணி வந்திருக்கின்றனர். அதுமட்டுமல்ல தங்களது பாலியல் இச்சை மற்றும் காதல் ஆலோசனைக்காக இந்த அதிகாரவர்க்கத்தினர் எப்ஸ்டீனை அணுகியிருக்கின்றனர் என்பதைப் படிக்கும்போது ஆத்திரம் வருகிறது.

எப்ஸ்டீன் கோப்புகளின் மூலம் நாம் தெரிந்துகொள்ள வேண்டியது என்னவெனில் அவரது நட்பு வலை ஊடகங்கள், அரசியல், தொழில்நுட்பம், கல்வித்துறை, நிதி மற்றும் ஹாலிவுட் என்று எல்லா உலகம் முழுவதும் பரவியுள்ளது என்பதையே. இந்த கோப்புகளின் மூலம் மாட்டிக்கொண்ட எல்லாப் பிரபலங்களும் எப்ஸ்டீனுடன் தங்கள் உறவு எப்படி இருந்தது என்பதை மறுபடியும் விளக்கவேண்டிய கட்டாயத்திற்குள்ளாகியிருக்கின்றனர் .அவர்கள் ஏன் அந்த மின்னஞ்சலை அவருக்கு அனுப்பினார்கள், அல்லது அந்த நேரத்தில் அந்த இடத்தில் அந்தப் புகைப்படத்தில் அவர்கள் என்ன செய்தார்கள் என்பதை விளக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். நோர்வே, ஸ்லோவாக்கியா, பிரான்ஸ், இங்கிலாந்து மற்றும் வால் ஸ்ட்ரீட்டில் என்று எத்தனையோ உயர்பதவிகளில் உள்ளவர்கள் தங்களது பதவிகளை இதுவரை துறந்துள்ளனர்.இதுவரை வெளிவந்த கோப்புகளின் மூலம் முன்னாள் ஜனாதிபதி பில் கிளிண்டன், பிரிட்டனின் இளவரசர் ஆண்ட்ரூ , புரூஸ் வில்லிஸ், கேமரூன் டயஸ், கேட் பிளான்செட், கெவின் ஸ்பேசி, நவோமி கேம்பல் மற்றும் லியோனார்டோ டிகாப்ரியோ ,பில் கேட்ஸ், எலான் மஸ்க், மிக் ஜாகர், வூடி ஆலன், ரிச்சர்ட் பிரான்சன் மற்றும் பிரபல மருத்துவர் மெஹ்மெட் ஓஸ் ஆகியோர் எப்ஸ்டீனுடன் தொடர்பில் இருந்திருக்கின்றனர் .

இன்னும் 3.5 மில்லியன் கோப்புகள் வெளியே வரவில்லை. ஆனால் இந்த கோப்புகள் எந்தவிதமான இருட்டடிப்பும் செய்யாமல் வெளியிடப்படுமா என்பது சந்தேகமே. ஏனென்றால் இப்பொழுது அமெரிக்க அதிபராக இருக்கும் டிரம்ப் ,எப்ஸ்டீனின் முன்னாள் நெருங்கிய நண்பர். ஆதலால் அவர் சார்ந்த கோப்புகள் உண்மையாக வெளியேவர வாய்ப்பே இல்லை.

கமல்ஹாசன் நடித்த மிகச்சிறந்த திரைப்படமான மகாநதி படத்தில் தனது குழந்தையை நாசமாக்கிய வெங்கடாசலம் எனும் முதலாளியை கொல்ல போகும்போது அவன், "எனக்கு இதெல்லாம் தெரியாது ,தனுஷ் தான் எனக்கு supply செய்தான்" என்பான். அதற்கு கமல், "தனுஷ் கசாப்பு கடைக்காரன். நீ தான் பிள்ளைக்கறி வேணுமென்று கேட்டவன்" என்று சொல்வார். இங்கே தனுஷ் எனும் எப்ஸ்டீன் இறந்துபோய்விட்டான். அவனிடம் பிள்ளைக்கறி வாங்கிய அனைத்து அதிகார சக்திவாய்ந்தவர்களும் இன்னும் நல்லவன் என்ற போர்வையில் அலையும்வரை பாதிக்கப்பட்ட ஆயிரமாயிரம் பெண்களுக்கு நீதி கிடைக்கப்போவதில்லை ■


தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்பேர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
luckysankaran@gmail.com
LuckyJewelleryMelborne
0387121974, 0415233284



# விக்டோரியா வாழ் தமிழர்கள் இணைந்து கொண்டாடும்

# தமிழர் திருநாள்!










































SST
SPICES
& Things
Indian | Sri lankan | South Asian
Groceries & Take away
At SST Spices & Things, we pride ourselves on delivering top-notch customer service and offering high-quality food and groceries. Whether you're picking up your favorite spices, fresh produce, or delicious takeaways, we've got you covered!
7 days
10 am to 8 pm
SST Spices & Things Where quality meets community
Location:
79 McIntyre Rd,
Sunshine North VIC 3020
Contact:
03 9417 2517
Email:
sstspicesnthings@gmail.com

# சிட்னியில் தைத்திருநாள் கொண்டாட்டம்

















# சிட்னியில் தைத்திருநாள் கொண்டாட்டம்


















XD
XDream Jewellery
Manufacturers & Importers of Modern Styles in 22K (916) Solid Gold
Where Tradition Meets Timeless Luxury
Discover gold jewellery, designed to sparkle for generations.
22K & 24K Pure Gold – Exquisite Designs, Unmatched Craftsmanship
Cash When You Need It
Trust You Can Count On
Bring your gold Top Dollar Paid
Safe & Secure • Same-Day Service
02 8677 4490
xdreamjewellery.com.au
08xdream@gmail.com
8 Aurelia St,
Toongabbie NSW 2146



# எதிர்ப்பக்கம்

### ஆசிர்வதிக்கப்பட்டவன் - வெற்றிமாறன் மைல்ஸ் டு கோ

நான் உலக சினிமா ரசிகன். முன்பெல்லாம் தேடித் தேடி ஈரானிய ,ஜப்பானிய ,பிரெஞ்சு ,ஸ்பானிஷ் மற்றும் இதர மொழிகளில் வெளியான உலகத்தரம் வாய்ந்த பிற மொழி திரைப்படங்களைப் பார்த்திருக்கிறேன்.பிறகு எப்பொதெல்லாம் நேரம் கிடைக்கிறதோ அப்பொழுது ஏதாவது நல்ல உலக சினிமா பார்ப்பது வழக்கம். இங்கே வாழும் என் ஈரானிய நண்பனிடம் அவர்களது திரைப்படங்களைப் பற்றி மணிக்கணக்கில் பேசிக் கொண்டிருப்பேன். ஒருமுறை அவன் உனது தாய்மொழியான தமிழில் ஏதேனும் நல்ல திரைப்படம் பரிந்துரைக்க முடியுமா என்றான் . நான் கொஞ்சம் கூட யோசிக்கமால் ஆடுகளம் படத்தைக் கூறினேன். ஏனென்றால் அந்தப் படம் எனக்கு அவ்வளவு பிடிக்கும். குறைந்த பட்சம் ஒரு 100 தடவையாவது பார்த்திருப்பேன். என் மண்ணையும், அதில் வாழும் மனிதர்களையும் அவ்வளவு இயல்பாக படம்பிடித்துக் காட்டியிருப்பார் வெற்றிமாறன். அந்தப் படத்திற்கு பின் என் மனதிற்கு பிடித்த இயக்குநர்களில் ஒருவராக வெற்றிமாறன் மாறினார்.

பிறகு வெற்றிமாறன் படங்கள் பார்ப்பதும், அந்தப் படங்களைப் பற்றி பேசுவதும் வழக்கமாயிற்று. வெகு நாட்களுக்கு பிறகு தமிழ் சினிமாவில் தனக்கென்று தனிப்பட்ட கதைசொல்லல் முறையைக் கொண்டுவந்தவர். detailing எனப்படும் காட்சி விவரணைகளில் மிகுந்த பிரயத்தனம் மற்றும் கடின உழைப்பை அவரது எல்லாப் படங்களிலும் காண முடியும்.சில வருடங்களுக்கு முன் ஆனந்த விகடனில் “மைல்ஸ் டு கோ” என்ற பெயரில் தனது சினிமா வாழ்க்கையை ஒரு தொடராக எழுதினார். ( அதாவது இவர் சொல்ல விகடன் ஆசிரியகுழுமம் எழுதி வெளியிட்டனர் ) . இது தொடராக வந்தபொழுது படிக்க முடியவில்லை. நீண்டு வளர்ந்துள்ள எனது Bucket Reading லிஸ்டில் இந்தப் புத்தகமும் இருந்தது. இப்பொழுது வந்த விடுமுறையில் அதனைப் படிக்கும் வாய்ப்பு கிடைத்தது. ஒரே இரவில் 220 பக்கங்களையும் படித்து முடித்தேன்.

‘என் பொம்முக்குட்டி அம்மாவுக்கு’ படத்தில் தன் குழந்தையை இழந்து தவிக்கும் ரேகாவினை நோக்கி பாதர் சொல்வதாக ஒரு வசனம் வரும், “கடவுளால் ஆசிர்வதிக்கப்பட்டவன் உனக்கு கணவனாகக் கிடைப்பான்.உன்னை உன் குறைகளோடு ஏற்றுக்கொள்வான் “ என்று. அப்படி கடவுளால் ஆசிர்வதிக்கப்பட்ட மனிதர்களோடு வாழும் வாய்ப்பு கிடைத்தவர்கள் அதிர்ஷ்டசாலிகள்.இங்கே வெற்றிமாறனும் கடவுளால் ஆசிர்வதிக்கப்பட்டவர். அவருக்கு அற்புதமான தாய் / தந்தையர், அருமையான நண்பர்கள் , குரு பாலு மகேந்திரா, தயாரிப்பாளர்கள், ஹீரோ - தனுஷ் , உதவி இயக்குநர்கள் ( விக்ரம் சுகுமாரன் ,மணி மற்றும் பலர் ) கிடைத்திருக்கின்றனர்.

அவருக்கும் பாலு மகேந்திராவிற்குமான உறவு மிக ஆழமானது. இரண்டு முறை சண்டை போட்டு வந்தபோதிலும் பாலு மகேந்திரா அவரிடம் அன்பு காட்டுகிறார். ஒருமுறை பாலு மகேந்திரா உதவி இயக்குநராக தன்னிடம் பணிபுரியும் வெற்றியை பார்த்து , “ நீங்க எல்லாம் எப்படிடா டைரக்டர் ஆகப்போறிங்க .வாய்ப்பே இல்லை” என்று கோபத்தில் கத்தியபோது அதற்கு வெற்றி , “ அதை நீங்க சொல்லவேண்டாம். சினிமா சொல்லட்டும்” என்று கோபத்தில் சொல்லிவிட்டு வெளியேறியிருக்கிறார். பிறகு கோபம் தணிந்தபிறகு குருநாதரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு சேர்கிறார்.பொல்லாதவன்,ஆடுகளம் படத்தை பார்த்த பாலுமகேந்திரா , “இவ்வளவு வன்முறை நிறைந்த திரைப்படம் எடுக்கிறாயே?” என்று வருத்தப்பட்டிருக்கிறார். வெற்றிமாறன் பாலு மற்றும் கதிர் ஆகியோருடன் உதவி இயக்குநராகப் பணிபுரிந்தாலும் அவர்களிடமிருந்து தனித்து தனக்கென்று தனிப்பாணி திரைப்படம் எடுத்து வெற்றி பெற்றிருக்கிறார்.

வெற்றிமாறனின் காதலி இவருக்காக பத்து வருடம் காத்திருக்கிறார். பொல்லாதவன் படம் எடுக்கும்போது வெற்றி படத்திற்கு பஜாஜ் Pulsar வண்டி தான் வேண்டுமென்றபொழுது தயாரிப்பாளர் முதலில் தரவில்லை. இருந்தாலும் தனது மனைவியின் சொந்தக் காசில் வண்டி வாங்கி படம் எடுத்திருக்கிறார்.

ஆறு தயாரிப்பாளர்களிடம் அட்வான்ஸ் வாங்கி படம் எடுக்காமல் போனது. ஒரு முறை போட்டோஷூட் வரைக்கும் சென்று படம் நின்று போனது. பிறகு ஒரு முறை இரண்டு நாள் படம் எடுத்த பிறகு படம் நின்று போனது என்று பல தோல்விகள் அடைந்த போதிலும் துவளாமல் இருந்ததற்கு காரணம் தனது நண்பர்கள் தான் என்று சொல்கிறார். பொல்லாதவன் படத்திற்கு வெற்றிமாறன் முதலில் வைத்த பெயர் “இரும்புக்குதிரை” அல்லது TN 4l 3551 ( முதலில் வாங்கிய பைக் நம்பர் . ஆனால் தயாரிப்பாளரோ “தம்பிக்கு எந்த ஊரு” என்று பெயர் வைக்கலாம் என்று சொல்லுகிறார். அதற்கு வெற்றிமாறன் , “அதற்கு பேசாமல் பொல்லாதவன் என்று பெயர் வைச்சுட்டு போகலாம்” என்று வெறுப்புடன் கூறுகிறார். உடனே தனுஷ் மற்றும் தயாரிப்பாளர் மகிழ்ந்து இந்த பெயரே 20% வசூல் கொடுக்கும் என்று அவரை சமாதானம் செய்திருக்கிறார்கள்.

“ஆடுகளம்” படம் முதலில் சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளில் எடுப்பதாக இருந்ததாம். ஆனால் அவரின் உதவி இயக்குநராகப் பணிபுரிந்த விக்ரம் சுகுமாரன் ( மதயானைக் கூட்டம் இயக்குநர் ) ,இந்தப் படத்தின் கதைமாந்தர்களின் குணாதியசங்கள் மதுரை மண்ணைப் பிரதிபலிக்கின்றன என்று சொன்னதால் தான், படத்தின் லொகேஷனை மதுரைக்கு மாற்றியிருக்கிறார்கள். தொடர்ச்சியாக 4 வருடம் கடின உழைப்பைக் கோரிய படம். இடைவேளைக்கு வரும் சேவல்சண்டை காட்சிகளை 24 நாட்கள் தொடர்ச்சியாக எடுத்திருக்கிறார்கள். அவர்களின் உழைப்பின் பலனாக அந்தப் படத்திற்கு நான்கு தேசிய விருதுகள் கிடைத்தன.

திரைப்படங்களைப் பற்றி மட்டுமே பேசாமல் சொந்த விஷயங்கள் பற்றியும் பேசியிருக்கிறார். எவ்வாறு தீவிர புகைப்பழக்கத்திற்கு அடிமையாக இருந்து ( அதாவது ஒரு நாளைக்கு 170 சிகரெட்டுகள் வரை ) எவ்வாறு அதிலிருந்து மீண்டார் என்பதைச் சொல்லுகிறார். ( வாரணம் ஆயிரம் படம் அவருக்கு தூண்டுகோலாகஇருந்திருக்கிறது ). தன் தந்தையிடம் தான் செய்த தவறான செயலுக்கு மன்னிப்பு கேட்காமல் போனதையும் , ஒரு தடவை இயக்குநர் பாலு மகேந்திராவின் மனம் புண்படும்படி பேசியதற்கு மன்னிப்பு கேட்காமல் போனதையும் ஒளிவு மறைவில்லமால் பேசியிருக்கிறார்.

இன்னொரு ஆச்சரியமான விஷயம் அவரின் தணியாத இலக்கிய ஆர்வம். அவரின் புத்தக / திரைப்படப் பட்டியலை கேட்டபிறகு பாலு மகேந்திரா கவரப்பட்டு தன்னிடம் உதவி இயக்குநராகப் பணிபுரிய சம்மதம் சொல்லியிருக்கிறார். தொடர்ந்து படிக்கிறார். வாசிப்பு மிக முக்கியம் என்று சொல்லுகிறார்.

எவ்வளவு உயரத்தில் இருந்தபோதும் , Robert Frost வரிகளான “ கடக்க வேண்டிய தூரம் இன்னும் அதிகம். மைல்ஸ் டு கோ “ என்று தன்னடக்கத்துடன் இருக்கிறார். சினிமாவைக் காதலிக்கும் அனைவரும் கண்டிப்பாகப் படிக்க வேண்டிய புத்தகம்.

### சூது கவ்வும் - மக்கள் மறக்கும்வரை

நான் கனடாவில் வேலை பார்க்கும்போது என்னோடு பணி புரிந்த மதுரையைச் சேர்ந்த வடக்கிந்திய நண்பன் இருந்தான். அவனிடம் 100 GB அளவிற்கு documentary எனப்படும் ஆவணப்படங்கள் வைத்திருந்தான். அவனது பொழுதுபோக்கு என்பது நேரம் கிடைக்கும்போதேல்லாம் இந்த ஆவணப்படங்களைப் பார்ப்பதுதான்.அவனுக்கு BBC எடுத்துள்ள ஆவணப்படம் என்றால் உயிர் . அவனிடமிருந்தே இந்தப் பழக்கம் எனக்கும் தொற்றிக்கொண்டது.

விடுமுறை என்பதே பயணம், நண்பர்களை சந்தித்தல், விரும்பிய புத்தகங்களை படித்தல், படங்களை பார்த்தல் போன்ற மற்ற நேரங்களில் செய்ய முடியாததை செய்வதற்கு தானே!

Netflixல் Bad Boy Billionaires என்ற Documentary இந்தியாவில் மாபெரும் மோசடி செய்து முதலில் மாட்டிக் கொண்டு பிறகு சட்டத்திலுள்ள ஓட்டைகளை பயன்படுத்தி தப்பித்துக் கொண்ட நான்கு பில்லியனர்களைப் பற்றியது.

இந்தியா போன்ற நாட்டில் சிறிய திருட்டுகளுக்கு சட்டங்கள் தண்டனை கொடுக்கும். அதே சட்டங்களே மாபெரும் குற்றங்களுக்கு அதாவது பல்லாயிரம் கோடி அளவில் ஊழல் செய்தால் உங்களை பாதுக்காக்கும்.எவ்வாறு நான்கு திருடர்கள் சட்டத்திலுள்ள ஓட்டைகளைப் பயன்படுத்தி வெளியே வந்தனர் என்பதை மிகத்தெளிவாகவும் சுருக்கமாகவும் நான்கு எபிசோடுகளில் படமாக்கியுள்ளனர்.

**சத்யம் ராமலிங்க ராஜு :**

சத்யம் கம்ப்யூட்டர்ஸ் நிறுவனத்தின் தலைவரான ராமலிங்க ராஜு எவ்வாறு கஷ்டப்பட்டு முன்னேறினார், எவ்வாறு ‘Y2K’ பிரச்சினை இவர்களுக்கு சாதகமாக பயன்பட்டது, outsourcing துறையில் அசாதாரண வளர்ச்சி, சந்திரபாபு நாயுடுவின் புதிய IT துறை சார்ந்த கொள்கைகள் எவ்வாறு அவருக்கு உறுதுணையாக இருந்தன என்று முதலில் சொல்லிவிட்டு பிறகு எங்கே சறுக்கினார் என்பதை தெளிவாக சொல்லுகின்றனர்.சத்யம் நிறுவனம் இந்தியாவில் நான்காவது பெரிய IT நிறுவனமாகிய பிறகு ராஜுவிற்கு எப்படியாவது முதல் மூன்று இடங்களுக்கு செல்லவேண்டும் என்று ஆசை. அதே நேரத்தில் ஐந்தாவது இடத்திற்கு செல்லக்கூடாது என்ற பயத்தில் பொய்கணக்கு எழுத ஆரம்பிக்கிறார். அதாவது பொய்யான வங்கிக்கணக்கில் மில்லியன் டொலர் கணக்கில் வரவு வைக்கிறார். இதன் மூலம் அவரது நிறுவனம் ஒவ்வொரு காலாண்டிலும் 8-9 சதவீத வளர்ச்சி காட்டுகிறது. ஒரு கட்டத்தில் 1 பில்லியன் டொலர் அளவில் ஓட்டை விழுகிறது. அதை சரிசெய்ய அவரது மற்றொரு நிறுவனமான maytas எனும் கட்டுமான நிறுவனத்தை 1 பில்லியன் டொலர் கொடுத்து வாங்கப்போகிறேன் என்ற முடிவு, பங்கு மார்க்கெட்டில் சத்யம் பங்குகளுக்கு வேட்டு வைக்கிறது. அங்கே மாட்டியவர் பிறகு தனது தவறினை ஒப்புக்கொள்கிறார். பிறகு பல்வேறு விசாரணைகளுக்கு பிறகு அவருக்கு சிறைத்தண்டனை கிடைக்கிறது. பிறகு வழக்கம்போல் பரோலில் வெளியே வந்துவிட்டு சுதந்திரமாக நடமாடி வருகிறார். சட்டம் தன் கடமையை பணக்காரர்களுக்கு சரியாகச் செய்தது.

**விஜய் மல்லையா :**

மொத்தமுள்ள நான்கு பேரில் ஒப்பிட்டளவில் குறைந்தபட்ச ஊழல் செய்தவர் என்றே சொல்ல முடியும். இளவயதிலேயே மோட்டார் ரேஸ் பந்தயத்தில் வெற்றிவாகை சூடி ஆடம்பர வாழ்க்கையை வாழ்ந்து வந்த விஜய் மல்லையா தன் தந்தையின் இறப்பிற்கு பிறகு UB நிறுவனத்தின் தலைவராகிறார். பிறகு மத்திய தர வர்க்கத்தினரின் தேவையை முன்னிட்டு kingfisher airlines தொடங்குகிறார். ஏர்லைன்ஸ் நிறுவனங்கள் மிகுந்த செலவைக் கோருபவை. முதலில் நிறையப் பேர் பயன்படுத்தினாலும், low cost carrier பெருத்த லாபமீட்டக்கூடியவை அல்ல. அதற்கு செலவுகளைக் குறைக்க வேண்டும். ஆனால் மல்லையாவோ தொடர்ந்து தன் செல்வாக்கினை பயன்படுத்தி மேலும் மேலும் வங்கிகளில் கடன் வாங்குகிறார் (முறைகேடான வழிகளில்). பிறகு ஒரு கட்டத்தில் விமானப் பணியாளர்களுக்கு 6 மாத அளவில் சம்பள பாக்கி நிலுவையில் உள்ள நிலையில் தனது அறுபதாவது பிறந்தநாளை மிகுந்த பொருட்செலவில் கொண்டாடுகிறார். பிறகு பலத்த சர்ச்சைகளுக்கு நடுவில் நீதிமன்றம் கைது உத்தரவு எப்படியோ அவருக்கு முன்னரே தெரிந்து நாட்டை விட்டு ஓடிப்போய் லண்டனில் ராஜவாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்கிறார். இழப்பு என்னவோ அவரது விமான நிறுவனத்தில் பணிபுரிந்த பல்லாயிரம் தொழிலாளர்களுக்கு தான்.



ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

**நிரவ் மோடி:**

தனது மாமாவாகிய பிரபல வைர வியாபாரியான முகுல் சோக்சியிடம் நுணுக்கங்களை கற்றுக்கொண்ட பிறகு தனியே வைரக்கம்பெனி ஆரம்பிக்கிறார். பிறகு அவரது ’கோல் கொண்டா வைர நெக்லஸ் மாதிரி’ எல்லோர் கவனத்தையும் கவர்கிறது. பிறகு நிரவ் மோடி உலகெங்கும் தனது கடைகளை திறக்கிறார்.


நீங்கள் கேட்கலாம். இதற்கெல்லாம் பணம் எங்கே ? இருக்கவே இருக்கிறது, நமது நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கி. வெளிநாட்டு கடன்களுக்கு அளிக்கப்படும் LoU ( Letter of Understanding) பத்திரத்தை அளிக்கும் போது அதற்கு இணையான cash collateral கொடுக்க வெண்டும். அதாவது 100 கோடி கடன் வாங்கினால் அதற்கு இணையாக 100 கோடி அளவிலான பணம் அல்லது இதர சொத்து பத்திரங்களை அளிக்க வேண்டும். Punjab National Bank ல் எந்தவொரு cash collateral இல்லாமல் LoU அளித்திருக்கின்றனர். அதாவது 24000 கோடி அளவில் .இதற்கு வங்கிகளில் பணியாற்றும் உயரதிகாரிகளின் துணையோடு இந்த மோசடியைச் செய்கின்றனர்.பிறகு ஒரு கட்டத்திற்கு மேல் நிலைமை கையை மீறிச் செல்லும்போது CBI தலையிடுகிறது . பிறகு வழக்கம் போல கைது நிபந்தனை வரும்முன் லண்டனுக்குத் தப்பிச்செல்கிறார். இப்போது லண்டனில் சிறையில் இருந்தபோதும் , அவரை இந்தியாவிற்கு நாடு கடத்த தொடுத்த வழக்கு இன்னும் நிலுவையில் இருக்கிறது.

**சஹாரா சுப்ரோதா ராய் :**

இந்த நால்வரில் மிகவும் எரிச்சலும் ஆத்திரத்தையும் அளித்தவர் இவர். பல கோடி மக்களிடம் சிட் பண்ட் என்ற பெயரில் கோடிக்கணக்கான ரூபாய்களை வசூல் செய்து ஏமாற்றியவர். அதாவது மூன்று அல்லது ஐந்து வருடங்களில் உங்கள் தொகை இரட்டிப்பாகும் என்றும், பிறகு அந்த குறிப்பிட்ட காலம் வரும்போது அவர்களுக்கு கிடைக்க வேண்டிய பணத்தை மறுபடியும் pyramid schemeல் முதலீடு செய்ய கட்டாயப்படுத்தி அந்த ஏழை மக்களுக்கு கிடைக்கவேண்டிய பணத்தை கிடைக்காமல் செய்து கிட்டத்தட்ட 25,000 கோடிகளுக்கு மேல் சுருட்டியுள்ளார். SEBஐ தலையிட்டு எப்படி உங்கள் நிறுவனத்தில் 4 கோடி முதலீட்டாளர்கள் வந்தனர் என்றும் அவர்களுக்கு பணத்தை திருப்பித் தரவேண்டும் என ஆணையிடுகிறது. அதற்கு ஆணவத்துடன் 127 லொறிகளில் பணத்தை திருப்பிக்கொடுத்து விட்டோம் என்று அதற்கான ஆதாரங்களை அனுப்புகின்றனர். கடைசி வரை தெனாவட்டு மற்றும் திமிராகவே நடக்கின்றனர். ஒரு கட்டத்தில் பொலிஸ் கைது செய்து சிறையில் அடைக்கின்றனர். பிறகு வழக்கம்போல் பரோலில் வெளிவந்து சுதந்திரமாக வாழ்கின்றார் சுப்ரோதா ராய். அவரது நிறுவனத்தில் பணம் கட்டிய அப்பாவி 4 கோடி மக்களின் பணம் கிடைக்கவேயில்லை.

இந்த நால்வர் மட்டுமே திருடர்களா ? இந்த மொத்த அமைப்புமே இவர்களுக்குச் சாதகமாகத்தானே இருக்கிறது . மக்களை கொள்ளையடித்த பணத்தில் என்னவொரு ஆடம்பரம் ! இவர்களின் அனைத்து கொண்டாட்டங்களுக்கும் அத்தனை நடிகர்களும் , அரசியல்வாதிகளும், கிரிக்கெட் வீரர்களும் பங்கேற்று ஆட்டம் போட்டார்களே ? அவர்களும் குற்றவாளிகள் தானே . நமது சட்டங்களும் , அதிலுள்ள எண்ணற்ற சிக்கல்களும் இவர்களைப் போன்ற மோசடிப் பேர்வழிகளுக்கு பெரும்பாலும் சாதகமாகத் தானே இருக்கின்றன.

(19ஆம் பக்கம் பார்க்க)



# எதிர்ப்பக்கம்

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மோசடிகள் வந்த காலகட்டத்தில் ஊடகமெங்கும் இவர்களைப் பற்றிய செய்திகள் . பிறகு என்னவாயிற்று ? நாம் மறந்து போனோம். அது தானே அவர்களுக்கு வேண்டும்

**சாசனம் - கந்தர்வன்**

த.மு.எ.ச. அமைப்பில் இயங்கும் பெரும்பாலான இடதுசாரி எழுத்தாளர்களின் எழுத்துக்களை நான் முன்பு அவ்வளவாகப் படித்ததில்லை. எங்கள் வீட்டில் என் தந்தை வாங்கும் தீக்கதிர் மற்றும் செம்மலர் இதழ்களில் வரும் கதைகளை எப்போதோ படித்த நினைவு.

அது மட்டுமின்றி எழுத்தாளர் மற்றும் நண்பருமான சாம்ராஜ் எழுதிய 'மூவந்தியில் சூலுறும் மர்மம்' கட்டுரை தொகுப்பு நூலில் இடதுசாரி எழுத்துக்களை பற்றிய ஒரு நல்ல கட்டுரை படித்திருக்கிறேன். அந்தக் கட்டுரையில் இடதுசாரி எழுத்தாளர்களின் நல்ல சிறுகதைகளை அறிமுகப்படுத்தியிருப்பார். அப்பொழுது தான் மீண்டும் பல இடதுசாரி எழுத்தாளர்களின் அறிமுகம் கிடைத்தது. மேலாண்மை பொன்னுசாமி, கந்தர்வன்,ச.தமிழ்செல்வன் எழுதிய அபாரமான கதைகளைப் பற்றி அறிந்து கொண்டேன்.

கந்தர்வனின் எழுத்துக்கள் நாட்டுமையாக்கபட்டதும், அவை தமிழ் இணைய நூலகத்தில் உள்ளன என்றும் ஏற்கனவே எனக்கு தெரியாது. அவரின் பெரிதும் பாராட்டப்பட்ட சாசனம் கதையைத் தேடி அலைந்தேன். பிறகு ஆர்.வி.யின் வலைத்தளத்தில் இந்தத் தொகுப்பின் சுட்டி கிடைத்தது. மொத்தம் 10 கதைகள். என் மனதைத் தொட்டவை "சாசனம், தான் , திருவேறு ,விதிகளுக்கப்பால்,ஒரு பொழுதாயினும் " ஆகிய ஐந்து கதைகளே.

சாசனம் : ஒடுக்கப்பட்ட மக்களுக்கு தங்கள் உரிமை களை மீட்டெடுக்க எந்தவொரு எழுதப்பட்ட சாசனமும் தேவையில்லை . அவர்களின் ஒற்றுமை மட்டுமே அவர்களுக்கு நீதி கிடைக்க வழி செய்யும்.

தான் : நம் அனைவருக்கும் நாம் தான் இந்த உலகில் நல்லவன். மற்றவர் எல்லாம் சுயநலமி என்று நினைப்பு. அந்தத் தான்தோன்றித்தனத்தை கிண்டல் செய்யும் கதை.

திருவேறு : நாம் என்னதான் திறமைசாலியின் வாரிசாக இருந்தாலும் நமக்கு திறமை எல்லாம் பிறப்பினால் வராது. பெயரில் திரு இருந்தாலும் திறமை என்பது வேறு

விதிகளுக்கப்பால் : அரசு அல்லது எந்த நிறுவனமாக இருந்தாலும் நாளடைவில் எழுதப்படாத விதிகள் வந்துவிடும். அந்த விதிகளுக்கும் அந்த நிறுவனங்களுக்கும் எந்த சம்பந்தம் இல்லையெனினும் சில நாட்டாமைகள் ராஜ்ஜியம் தான். தைரியமாக ஒரு சிலர் கேள்வி எழுப்பும்போது அந்த ராஜ்ஜியம் நிலைகுலைகிறது ( தொழிற்சங்கங்களின் நிலைபாட்டினை சொல்லும் எளிய கதை)

ஒரு பொழுதாயினும்: மிக எளிய கதை. நம்மில் அனைவரும் நமது சிறிய சிறிய ஆசைகளை சில அற்ப காரணங்களுக்காக தள்ளிப் போடுவோம் தானே. அவ்வாறு செய்யாமல் ஒரு பொழுதாயினும் முயற்சி செய்தால் அதில் கிடைக்கும் சந்தோசம் தனி.

மிக எளிய கதைகள் . இடது சாரி வாசம் வராத கதைகள். கண்டிப்பாகப் படியுங்கள்

**நெஞ்சுக்கு நீதி - it was just an Accident**

ஒஸ்கர் விருதுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட படங்களில் நான் குறிப்பாக சர்வதேச சிறந்த படங்களின் பட்டியலைப் பார்ப்பேன். பல முறை நாம் எதிர்பார்க்கும் படங்கள் இருக்காது. அதே போன்று இந்தியா சார்பாக பெரும்பாலும் மிகச்சுமாரான படங்களையே இவர்கள் தேர்ந்தெடுத்து அனுப்புவதால் நம் படங்கள் இந்தப் பட்டியலில் வர வாய்ப்பே இல்லை. பொதுவாக இந்தப் பிரிவில் ஈரானியப் படங்கள் எப்படியும் தேர்வாகிவிடும். இந்த வருடப் பட்டியலில் உள்ள "It was Just An accident "

விசாரணை படத்தில் வரும் கைதிகளை அடித்த இன்ஸ் பெக்டர் தனியாக ஒரு நாள் அந்தக் கைதிகளிடம் மாட்டினால் என்னவாகும். நீங்கள் யோசித்திருக்கிறீர்களா ? அதே போன்று ஈரானில் தங்களை அரசியல் கைதிகளாக கைது செய்து, கண்களைக் கட்டி, மிருகத்தனமாக சித்திரவதை செய்த உளவுத்துறை இன்ஸ்பெக்டரை ( செயற்கைக்கால் பொருத்தி நொண்டி நொண்டி நடப்பவர் பொம்மைக்காலன் என்று அழைக்கின்றனர்) அவனால் சித்திரவதைப்பட்ட வஹித் கடத்திச் சென்று கொல்லப்பார்க்கும்போது , நாம் சரியான நபரை தான் கடத்தியிருக்கிறோமா என்று சந்தேகம் வருகிறது.

பிறகு அவனைப்போலவே பாதிக்கப்பட்ட மற்றவர்களையும் கூட்டிக்கொண்டு கடைசியில் அந்த இன்ஸ்பெக்டரை என்ன செய்கிறார்கள் என்பது தான் கதை.

குற்றத்திற்கு தண்டனை என்பது என்ன? பதிலுக்கு அவன் செய்ததையே திரும்பி செய்வதா? இல்லை இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்தலா ? வெகு இயல்பாக இந்த படத்தை எடுத்திருக்கிறார்கள். அந்த கொடூர இன்ஸ்பெக்டர் செய்த கொடுமைகளை எந்த காட்சியிலும் காட்டாமல், அவனால் பாதிக்கப்பட்டவர்கள் துக்கம் மிகுந்து மனவேதனையில் பிதற்றுகிறார்கள். அற்புதமாக படத்தை இயக்கியிருக்கிறார் பானாஹி ( Panahi )

ஒரு கட்டத்தில் இந்த படத்தில் வரும் கதாபாத்திரம் ஷிவா எனும் பெண் , " இவனைக் கொன்று விட்டால் எல்லாம் சரியாகி விடுமா, இந்த அமைப்பு அப்படி தானே இருக்கிறது, அதை என்ன செய்யப்போகிறாய் ?" என்று கேட்பாள். ஆமாம் அமைப்பு கொஞ்சம் கூட மாறாமல் இருக்கிறது. காவல்துறையினர் லஞ்சம் வாங்குகின்றனர் (பணமாக இல்லை எனும்போது பரவாயில்லை எங்களிடம் card reader இருக்கிறது ,அதில் உன் டெபிட் கார்டினை தேய்த்து விடு என்கின்றனர்). மருத்துவமனையில் செவிலிகள் லஞ்சம் கேட்கின்றனர் (இனிப்பு வாங்கி தர சொல்லுகின்றனர்) என்று எதுவும் அங்கே மாறவில்லை.

இறுதிக்காட்சியில் வாஹித் திரும்பி நிற்கிறான் . இவர்கள் மன்னித்து உயிர்ப்பிச்சை அளித்த அந்த செயற்கைக்கால் இன்ஸ்பெக்டர் அவனை நெருங்கி வரும் சத்தம் கேட்கும். பிறகு அவனை விட்டு விலகிச் செல்லும் சப்தத்துடன் படம் முடிகிறது. அற்புதமான முடிவு.

இந்த படம் ஏற்கனவே கேன்ஸ் விழாவில் தங்கப்பனை விருது வாங்கியிருக்கிறது. கண்டிப்பாக சிறந்த உலகப்படத் திற்கான ஒஸ்கர் விருது வாங்குவது நிச்சயம்.

"உங்களைக் கைவிட்ட அதே அமைப்பு இன்னும் தொடரும் போது , நீதி என்பது என்னவாயிருக்கும் ?" - என்ற அழுத்தமான கேள்வியுடன் இந்த படம் நம்மைத் தொந்தரவு செய்கிறது.


GREEN PARK BEACH HOTEL – PROPERTY FOR SALE

Property Details:
Land Area:
34 perches (Hotel building – 22 perches, Car parking – 12 perches)

Accommodation:
18 rooms with air conditioning, cable/ satellite TV, wireless internet, feather/down pillows, linens, tub, bath sheets, and dressing gowns

Restaurant: Seats 100, offering a range of Asian dishes à la carte



Overview:
Green Park Beach Hotel is a beachfront property in Trincomalee, offering 18 fully equipped rooms and modern amenities for guests. The hotel is conveniently located:
- 350 metres from St Mary's Cathedral
- 4.4 km from Sober Island
- Close to Maritime and Naval History Museum and Trincomalee reef
- 10 minutes' walk from the town center
- Short drive to Elephant Ridge and Trincomalee train station






This property combines prime location, beachfront access, and a ready-to-operate hotel, making it an attractive investment opportunity

Address: 312 Dyke Street, Trincomalee, Sri Lanka
Contact:+94 76 271 2409 | greenparktco@live.com


CEYLON EXPRESS
MONEY TRANSFER
❖ Best Rates Guarantee
❖ Same Day Bank Transfer
❖ Responsible Customer Support
❖ Easy, Quick Internet Money Transfer
282-284, londales st, Dandenong
CONTACT : OSMAN 0402 396 052


PAINTING SERVICES
INTERIOR AND EXTERIOR
TIMBER FLOORING
supply and installation
DECKING
BUDGET FRIENDLY HOME IMPROVEMENTS
Contact : 040 0287 198

# பாதுகாப்புத் துறையில் ஒரு புதிய வசந்தம்!

ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் நிலவும் புவிசார் அரசியல் மாற்றங்களுக்கு மத்தியில், அவுஸ்திரேலியாவும் இந்தோனேசியாவும் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கைகோர்த்துள்ளன. அவுஸ்திரேலிய பிரதமர் அந்தோனி அல்பனீஸின் இந்தோனேசிய விஜயத்தின் போது, ஜனாதிபதி பிரபோவோவுடன் இணைந்து இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இது வெறும் இராணுவ ஒத்துழைப்பு மட்டுமல்ல, இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம், முதலீடு மற்றும் வேலைவாய்ப்புகளைப் பலப்படுத்தும் ஒரு பொருளாதாரப் பாலமாகவும் அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. "அமைதியான மற்றும் பாதுகாப்பான பிராந்தியத்தை உருவாக்கவே இந்த இணைவு" எனப் பிரதமர் அல்பனீஸ் பெருமிதத்துடன் தெரிவித்துள்ளார்.





# காசா போர்: சிதைக்கப்பட்ட ஆஸி. கல்லறைகள்!

காசாவில் இஸ்ரேல் - ஹமாஸ் இடையே நீடிக்கும் போர், முதலாம் உலகப் போரில் வீரமரணமடைந்த அவுஸ்திரேலிய வீரர்களின் அமைதியையும் குலைத்துள்ளது. காசா நகரில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க 'கொமன்வெல்த் போர் கல்லறைத் தோட்டத்தில்' இருந்த சுமார் 250 அவுஸ்திரேலிய வீரர்களின் கல்லறைகள் இஸ்ரேலிய இராணுவத்தின் கனரக இயந்திரங்களால் (Heavy Machinery) சேதமடைந்துள்ளன. புகழ்பெற்ற 'லைட் ஹார்ஸ் பிரிகேட்' வீரர்களின் இந்த இறுதி ஓய்விடங்கள் சிதைக்கப்பட்டமை குறித்து அவுஸ்திரேலிய அரசு கடும் கவலை வெளியிட்டுள்ளது. எனினும், பாதிக்கப்பட்ட அனைத்துக் கல்லறைகளும் விரைவாகப் புனரமைக்கப்படும் என அதிகாரிகள் உறுதியளித்துள்ளனர்.

# தலிபான்களுக்கு 'நோ'!

தலிபான்களின் ஆட்சியை அதிகாரபூர்வமாக அங்கீகரிக்க மறுக்கும் அவுஸ்திரேலியா, கன்பராவிலுள்ள ஆப்கானிஸ்தான் தூதரகத்தை வரும் ஜூன் மாதத்துடன் மூட உத்தரவிட்டுள்ளது. தலிபான்களால் நியமிக்கப்படும் தூதுவர்களை ஏற்கப்போவதில்லை என்பதில் அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சு உறுதியாக உள்ளது. தலிபான்களின் மனித உரிமை மீறல்கள் மற்றும் ஜனநாயக விரோதக் கொள்கைகளால், அங்குள்ள மக்கள் அச்சத்தில் வாழ்வதையே இது காட்டுவதாக அகதிகள் சபை சுட்டிக்காட்டியுள்ளது. ஆயினும், தூதரகம் மூடப்படுவதால் அவுஸ்திரேலியாவிலுள்ள ஆப்கானிஸ்தான் சமூகத்தினர் தங்களின் தூதரகத் தேவைகளுக்காக பெரும் நெருக்கடியை எதிர்கொள்வரெனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




# 'ஒபரேஷன் கார்மன்': ஈராக்கில் சிக்கிய மெல்போர்ன் 'புகையிலை மன்னன்'!



மெல்போர்ன் நகரின் நிழல் உலகை ஆட்டிப்படைத்து, சட்டவிரோத புகையிலை வர்த்தகத்தில் 'மன்னனாக' விளங்கிய காசெம் ஹமத் (Kazem Hamad) ஈராக்கில் வைத்து அதிரடியாகக் கைது செய்யப்பட்டுள்ளார். போதைப் பொருள் கடத்தல், கொலை, கடத்தல் என நீண்ட குற்றப்பட்டியலைக் கொண்ட ஹமத், 2023 முதல் மத்திய கிழக்கிலிருந்து கொண்டே அவுஸ்திரேலிய குற்ற உலகை இயக்கி வந்துள்ளார். அவுஸ்திரேலிய பெடரல் பொலிஸார் (AFP) ஈராக் அதிகாரிகளுடன் இணைந்து நடத்திய 'ஒபரேஷன் கார்மன்' எனும் ரகசிய நடவடிக்கையின் மூலம் இந்த வேட்டை சாத்தியமானது. "குற்றவாளிகள் எங்கு ஒளிந்தாலும் தப்ப முடியாது" என்பதற்கு இது ஒரு பலமான எச்சரிக்கையாகும்.

# அத்துமீறும் மீனவர்களுக்கு ஆஸி. எச்சரிக்கை!



அவுஸ்திரேலியாவின் கடல் வளங்களைச் சுரண்டும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளுக்கு எதிராக 'பார்டர் போர்ஸ்' (Border Force) தனது கண்காணிப்பைத் தீவிரப்படுத்தியுள்ளது. குறிப்பாக குயின்ஸ்லாந்து மற்றும் டோரஸ் நீரிணைப் பகுதிகளில் அத்துமீறும் வெளிநாட்டுப் படகுகள் குறிவைக்கப்படுகின்றன. இந்த ஆண்டின் தொடக்கத்திலிருந்து இதுவரை 10 வெளிநாட்டுப் படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. "சட்டவிரோதமாக நுழைந்தால் படகுகள் பறிமுதல் செய்யப்படுவதோடு சிறைத்தண்டனையும் உறுதி" என அதிகாரிகள் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# மாத ராசிபலன்



## மேடம்

குடும்பத்தில் மகிழ்ச்சியும் உற்சாகமும் காணப்படும். உறவினர்களும் நண்பர்களும் மிகவும் உதவியாக இருப்பார்கள். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். சுபநிகழ்ச்சிகளால் வீட்டில் மகிழ்ச்சி நிலவும். சிலருக்குக் குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். மாதப் பிற்பகுதியில் உறவினர்கள் வகையில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்பட சாத்தியம் உள்ளதால், பொறுமையுடன் இருப்பது மிகவும் அவசியம். புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கி மகிழ்வீர்கள். மாதத்தின் பிற்பகுதியில் சகோதரர்களால் பிரச்சினைகளும், கடன் தொல்லைகளும் ஏற்படக்கூடும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.

அலுவலகத்தில் உங்கள் திறமைக்கு உரிய அங்கீகாரமும் பாராட்டும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும்.

## கடகம்

வெளிவட்டாரத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். புதிய முயற்சிகள் அனைத்தும் மிக எளிதாக வெற்றி அடையும். எதிர்பார்த்த பணவரவு கிடைப்பதுடன், எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகளும் ஏற்படும். குடும்பத்துக்குத் தேவையான பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. பிரிந்திருந்த கணவன் – மனைவி ஒன்று சேருவார்கள். திருமண முயற்சிகள் சாதகமாக முடியும். சுபநிகழ்ச்சிகளை திட்டமிட்டபடி நடத்தி முடிப்பீர்கள். புகழ்பெற்ற புண்ணியத் தலங்களுக்குச் செல்லும் வாய்ப்பு உண்டாகும். இதுவரை இருந்த உடல் உபாதைகள் நீங்கி, உடல் ஆரோக்கியம் மேம்படும். அலுவலகத்தில் மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும். அலுவலகத்தில் இருந்து வந்த அலைச்சல், பணிச்சுமை குறைவதால், உற்சாகமாகக் காணப்படுவீர்கள்.

## துலாம்

துலாம் – உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். பிரிந்திருந்த கணவன் – மனைவி ஒன்று சேருவீர்கள். சிலருக்கு பிள்ளைகள் மூலம் புதிய ஆடை, ஆபரண சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு புது வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். பிள்ளைகள் வழியில் பெருமைப்படத்தக்க செய்திகளைக் கேட்பீர்கள். திருமண முயற்சிகள் சாதகமாக முடியும். மகளுக்கு நல்ல இடத்தில் வரன் அமையும். ஆனால், குடும்பத்தில் அவ்வப்போது சிறுசிறு சங்கடங்கள் ஏற்படக்கூடும். வாகனத்தில் செல்லும்போது கவனமாக இருக்கவும். நண்பர்கள் மூலம் முன்னேற்றத்துக்கான வாய்ப்புகள் ஏற்படக்கூடும். அலுவலகத்தில் சக ஊழியர்கள் ஆதரவுடன் செயல்படுவர். பதவி உயர்வுக்கு வாய்ப்பு உண்டு. கோரிக்கைகள் எளிதில் நிறைவேறும். அரசு வகையில் எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும்.

## மகரம்

குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலையே காணப்படும். சுபநிகழ்ச்சிகளால் வீடு களை கட்டும். பிரிந்திருந்த கணவன் – மனைவி ஒன்று சேரும் வாய்ப்பு ஏற்படும். உறவினர்கள் வருகையால் ஆதாயம் உண்டாகும். நீண்ட நாளாகச் செல்ல நினைத்த புண்ணியத் தலங்களுக்குச் செல்லும் வாய்ப்பு ஏற்படும். குடும்ப உறுப்பினர்கள் உங்கள் ஆலோசனைகளுக்கு முக்கியத்துவம் தருவார்கள். மாத முற்பகுதியில் தாய்மாமன் வழியில் சில சங்கடங்கள் ஏற்படக் கூடும் என்றாலும் அதனால் பாதிப்பு எதுவும் ஏற்படாது. உணவு விஷயத்தில் கவனம் தேவை. அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். சக பணியாளர்களிடம் போதுமான ஒத்துழைப்பை எதிர்பார்க்க முடியாது. தொழில் மற்றும் வியாபாரத்தில் எவ்வளவுக்கு எவ்வளவு உழைக்கிறீர்களோ அவ்வளவுக்கு லாபம் கிடைக்கும். பற்று வரவு சுமுகமாக நடைபெறும். மறைமுகப் போட்டிகளை முறியடிப்பீர்கள்.

## இடபம்

திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் எதிர்ப்படும். குழந்தைகளால் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நிகழும். வெளிவட்டாரத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் ஏற்படும். எடுத்த செயலை வெற்றிகரமாக முடிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். குடும்பத்தில் உறவினர்களிடையே இருந்த கருத்து வேறுபாடு நீங்கி, சுமுகமான சூழ்நிலை உண்டாகும். தாய்வழி உறவினர்களிடம் அனுசரணையாக நடந்துகொள்ளவும். தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். அதிகாரிகளின் ஆதரவும், சக ஊழியர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும். சிலர் இடமாற்றத்தையும், சிலர் நெருக்கடியையும் சந்திக்கலாம். பொறுமையுடன் அனுசரித்து போகவும். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றமான சூழ்நிலையே காணப்படும். உழைப்புக்கேற்ற ஆதாயம் கிடைக்கும்.

## சிம்மம்

குடும்பத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும். சிலருக்கு பிள்ளைகள் வழியில் பொருள் வரவுக்கும் வாய்ப்பு உண்டு. புதிய ஆடை, ஆபரணங்கள் சேரும். விருந்து விசேஷங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்பு உண்டாகும். கணவன் – மனைவிக்கிடையே கருத்துவேறுபாடு ஏற்படக் கூடும் என்பதால் ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. உறவினர்களிடையே மதிப்பும் மரியாதையும் கூடும். அரசாங்க விவகாரங்கள் இழுபறிக்குப் பிறகு சாதகமாக முடியும். திருமணம், வளைகாப்பு போன்ற சுபநிகழ்ச்சிகள் நல்லபடி நடைபெறும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி நிலவும். அதிகாரிகளை அணுகும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

பணிச்சுமையும், அலைச்சலும் அதிகமாக இருக்கும்.

## விருச்சிகம்

மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தை வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். பணவரவு கணிசமாக உயரும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் உற்சாகமும் நிலவும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உறவினர்கள் வருகையும், அதனால் மகிழ்ச்சியும் உண்டாகும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். எதிரிகளின் தொல்லை இல்லாமல் போகும். உங்கள் முயற்சிகளுக்கு மனைவி, மகள் உள்ளிட்ட குடும்பப் பெண்கள் பக்கபலமாக இருப்பார்கள். வீட்டில் பொருள்கள் களவு போகக்கூடும் என்பதால், எச்சரிக்கையாக இருக்கவும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. உடல் ஆரோக்கியம் மேம்படும்.

## கும்பம்

உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவைப்படும் மாதம். அரசாங்கக் காரியங்கள் தாமதமாகவே முடியும். வழக்குகளில் சாதகமான போக்கு ஏற்படும். எதிலும் வெற்றியே காண்பீர்கள். எதிரிகள் பணிந்து போவர். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. மாதப் பிற்பகுதியில் சகோதரர்களுடன் சிறு சிறு கருத்துவேறுபாடு ஏற்பட்டு சரியாகும். தாய்வழி உறவினர்கள் வருகையால் சுபநிகழ்ச்சிகள் ஏற்பாடாகும்.

உடல் நலனில் கவனம் தேவை. வாகனத்தில் செல்லும்போது எச்சரிக்கையாக இருக்கவும்.

அலுவலகப் பணிகளில் திருப்தி உண்டாகும். சக ஊழியர்கள் உதவிகரமாக இருப்பர். தொழில், வியாபாரம் சுமாராகத்தான் இருக்கும். சக வியாபாரிகளால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

## மிதுனம்

பணவரவு கணிசமாக உயரும். புதிய ஆடை, ஆபரணங்கள் சேரும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதையும் சாதிக்கவேண்டும் என்ற மனஉறுதி ஏற்படும். பழைய வாகனத்தை மாற்றிவிட்டு, புதிய வாகனம் வாங்குவீர்கள். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் நிம்மதியும் ஏற்படும். பிரிந்திருந்த தம்பதி ஒன்று சேருவார்கள். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும். உறவினர்களால் உதவி கிடைக்கும் அதே நேரத்தில் அவர்களில் சிலரால் சிறு உபத்திரவமும் ஏற்படலாம். அக்கம் பக்கத்தில் இருப்பவர்களிடம் சற்று பக்குவமாக நடந்து கொள்வது நல்லது. வெளிவட்டாரத்தில் மதிப்பு மரியாதை கூடும்.தொழில் மற்றும் வியாபாரத்தில் லாபம் சுமாராகத்தான் கிடைக்கும். மாத முற்பகுதியில் வீண் விரயம் ஏற்பட சாத்தியமுள்ளது.

## கன்னி

அனைத்து காரியங்களிலும் வெற்றி உண்டாகும். பணவரவு மகிழ்ச்சி தருவதாக இருக்கும். சிலருக்கு புதிய வாகனம் வாங்கும் யோகமும் உண்டாகும். தெய்வ பக்தியும் ஆன்மிகத்தில் நாட்டமும் அதிகரிக்கும். உறவினர்களால் அடிக்கடி பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால் கூடுமானவரை அளவோடு பேசவும். தாய்வழி உறவினர்கள் வருகை சில சங்கடங்களைத் தரும் என்றாலும் பாதிப்பு இருக்காது. மாதப் பிற்பகுதியில் சகோதரர்களிடம் எதிர்பார்க்கும் உதவிகள் கிடைக்கும். நண்பர்களால் வாழ்க்கையில் நல்ல திருப்பம் ஏற்படக்கூடும்.அலுவலகத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். அதிகாரிகள் ஆதரவு காட்டுவார்கள். எதிர்பார்த்த பதவிஉயர்வு, ஊதிய உயர்வு கிடைக்கும். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு உண்டாகும். தொழில் மற்றும் வியாபாரத்தில் மாத முற்பகுதியில் விற்பனை அதிகரிப்பதுடன் லாபமும் படிப்படியாக உயரும்.

## தனுசு

வெளிவட்டாரத்தில் மதிப்பு மரியாதை நல்லபடியே இருக்கும். பண வரவு திருப்தி தருவதாக இருக்கும். காரியங்கள் அனுகூலமாக முடியும். குடும்பத்தில் வசதி வாய்ப்புகள் பெருகும். வீட்டில் மகிழ்ச்சியும் நிம்மதியும் குடிகொள்ளும். பெண்களால் நன்மை உண்டாகும். புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். உறவினர்கள் வழியில் நன்மைகள் ஏற்படும். குடும்பத் தேவைகள் ஒவ்வொன்றாக நிறைவேறும். பூர்விகச் சொத்துப் பிரச்சினையில் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். சிலருக்கு தடைப்பட்ட திருமணம் கூடி வரும். வீட்டில் சுபநிகழ்ச்சிகள் ஏற்பாடாகும். குடும்பத்துடன் கோயில்களுக்குச் சென்று பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். தொழில் மற்றும் வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும்.

## மீனம்

காரியங்களில் அனுகூலம் உண்டாகும். முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள்.வழக்குகளில் சாதகமான தீர்ப்பு கிடைக்கும். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. முன்னேற்றத்துக்குத் தடை இருக்காது. புதிய பொருள்களின் சேர்க்கை உண்டாகும். சிலருக்கு பயணங்களும் அதன் மூலம் ஆதாயமும் ஏற்படும்.கணவன் – மனைவிக்கிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றக் கூடும். ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. மாதத்தின் பிற்பகுதியில் குடும்பத்தில் மகிழ்ச்சியும் நிம்மதியும் உண்டாகும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். ஆனால், இதுவரை இருந்து வந்த அவப்பெயர் நீங்கி, செல்வாக்கு அதிகரிக்கும். வீண் மனக்கவலை மறையும். அதிகாரிகளை அனுசரித்துச் செல்லவும். தொழில், வியாபாரம் நன்றாகவே இருக்கும். போட்டிகள் குறையும். சக வியாபாரிகள் இணக்கமாக நடந்துகொள்வார்கள்.

HavenHill
REAL ESTATE

# Thinking of Selling? Sell Smart pay only 1% Commision.

**Selling your home is a big moment.**

That's why we focus on the most important things:
getting you the strongest result, with a smarter, fairer fee structure.

**With Sell Smart, you get:**

- Professional marketing
- Strategic buyer targeting
- Confident negotiation
- A premium, boutique experience

SELL SMART.
SAVE MORE.
ACHIEVE BETTER.



**Shagi Pathmanathan**
Founder / Director
**0413 076 585**
shagi@havenhillrealestate.com.au

**Yasantha De Silva**
Founder / Director
**0432 805 336**
yasantha@havenhillrealestate.com.au

Level 10, 14 Mason St, Dandenong VIC 3175
havenhillrealestate.com.au

Terms and Conditions apply*



PARBOILED RICE
ATHAVAN
PRODUCTS
Jaffna
CURRY POWDER
PREMIUM
MOONG DAL
(Roasted)
Soya Meat
CHILLI POWDER
EVERYTHING
YOU NEED
ALL IN ONE PLACE!
FAST
DELIVERY
THIS WAY UP
ஆதவன்
ATHAVAN
Cargo Service
Australia to
Sri Lanka
Sri Lanka to
Australia
BEST SERVICES:
Cargo & Shipping Services
Groceries & Household Items
Spices Export & Import
Pooja Products
Boutique Dress & Saree Collection
Contact Us For Details
Sri Ayyappa Pvt LTD
+61 449 722 392
40 David street, Dandenong VIC 3175, Australia
ஆதவன்
ATHAVAN
ஸ்ரீ
AYYAPPA
ATHAVAN